பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 251

செவ்வாய்க்கிழமை
04 ஓகஸ்ட் 2026

ஆடி 19 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com
077 120 9996
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## தேக்கமான நிலையில் அரசியலமைப்புப் பணி

ஜனாதிபதி அநுர ஏற்பு

கொழும்பு, ஓக. 4
புதிய அரசியலமைப்புப் பணிகள் தேக்கமடைந்துள்ளன என்பதை ஜனாதிபதி அநுர ஒப்புக்கொண்டார். அத்துடன் அந்தப் பணிகள் அனைத்தும் விரைவில் நிறைவுபெறும் என்றும் அவர் வாக்குறுதி

»11

நீதிபதிகளின் ஓய்வுவயது விவகாரம்

## மகாநாயக்கர்களிடம் ஓடியது அரசாங்கம்!

கொழும்பு, ஓக. 4
நீதிபதிகளின் ஓய்வுபெறும் வயதெல்லையை நீடிக்கும் திட்டம் தொடர்பில் மகாநாயக்கர்களுக்கு அரசாங்கம் விளக்கம் வழங்கியுள்ளது.
நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார மற்றும் அமைச்சரவைப் பேச்சாளரான அமைச்சர் நளிந்த ஜெயதிஸ்ஸ ஆகியோர் கண்டிக்கு நேற்றுப்

»11

## நீதிபதிகளின் ஓய்வுவயதை நீடிக்கக்கூடாது அரசாங்கம்

சட்டத்தரணிகள் சங்கம் விடாப்பிடி



கொழும்பு, ஓக. 4
நீதிபதிகளின் ஓய்வு வயதை நீடிக்கும் யோசனையை அரசாங்கம் கைவிட வேண்டும் என்று சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் ரஜீவ் அமரசூரிய தெரிவித்தார்.
கண்டியில் மகாநாயக்க தேரர்களைச் சந்தித்த பின்னர் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

»11

இரணைமடுவில்

## எரியுண்ட நிலையில் சடலமொன்று மீட்பு!

கிளிநொச்சி, ஓக. 4
கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட இரணைமடுக் குளத்துக்கு அருகாக உள்ள பகுதியில் எரிவடைந்த நிலையில் நேற்றுச் சடலமொன்று மீட்கப்பட்டுள்ளது.

»11



வடக்கு - கிழக்கில்

# காணி விடுவிப்புத் தொடர்பான நிலைப்பாட்டில் மாற்றமில்லை!

## தமிழ்க் கட்சிகளிடம் ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, ஓகஸ்ட் 4

வடக்கு கிழக்கில் இதுவரை விடுவிக்கப்படாத காணிகளை விரைவில் விடுவிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் எவ்வித மாற்றமும் இல்லை என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

»11

## செம்மணிப் புதைகுழியில் மீண்டும் அகழ்வு இன்று!

விரிவு பக்கம்:- 11

மோ.சைக்கிள் - ஹைஏஸ் விபத்து

## குடும்பப் பெண் பரிதாபச் சாவு!



இயக்கச்சியில் சோகம்

கிளிநொச்சி, ஓக. 4
கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட இயக்கச்சிப் பகுதியில் ஹைஏஸ் - மோட்டார் சைக்கிள் என்பன

»11

கைதாவதைத் தடுக்கக்கோரிய

## கோத்தாபயவின் மனுவை மீள ஒத்திவைத்தது மன்று

செப்ரெம்பர் 22ஆம் திகதிக்குத் தவணை



கொழும்பு, ஓக. 4
உயிர்த்தஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தன்னைக் கைது செய்வதைத் தடுக்கக்கோரிய கோத்தாபய ராஜபக்சவின் மனுவை மேன்முறையீட்டு நீதி மன்றம் மீள ஒத்தி வைத்

»11



## கொட்டித் தீர்க்கிறது கனமழை மத்திய மலைநாட்டில் பேரிடர்!

நுவரெலியாவில் 2,331 பேர் பாதிப்பு
பேராதனைப் பல்கலை நிறுத்தம்
பாடசாலைகளுக்கு இன்று விடுமுறை

கொழும்பு, ஓக. 4
மத்திய மலைநாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையால் அங்கு வெள்ளப் பேரிடர் ஏற்பட்டுள்ளதுடன் ஆயிரக் கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றாக

»11




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

**கொவிசெத**
திகதி: 03.08.2026
சீட்டிழுப்பு இலக்கம்: 4510
ஆங்கில எழுத்து: X
வெற்றி இலக்கங்கள்: 30 33 42 66
விசேட எழுத்து: X

**ஹந்தஹன ராசி சுப பலன்**
திகதி: 03.08.2026
சீட்டிழுப்பு இலக்கம்: 1577
வெற்றி இலக்கினம்: மீனம்
வெற்றி இலக்கங்கள்: 47 55 59 60

**NLB ஜய**
திகதி: 03.08.2026
சீட்டிழுப்பு இலக்கம்: 0536
ஆங்கில எழுத்து: K
வெற்றி இலக்கங்கள்: 5 8 3 7

**மெகா பவர்**
திகதி: 03.08.2026
சீட்டிழுப்பு இலக்கம்: 2616
ஆங்கில எழுத்து: L
சுப்பர் இலக்கம்: 23
வெற்றி இலக்கங்கள்: 04 28 39 58

**மஹஜன சம்பத**
திகதி: 03.08.2026
சீட்டிழுப்பு இலக்கம்: 6268
ஆங்கில எழுத்து: H
வெற்றி இலக்கங்கள்: 3 5 7 3 2 2

**தன நிதானய**
திகதி: 03.08.2026
சீட்டிழுப்பு இலக்கம்: 2298
ஆங்கில எழுத்து: K
வெற்றி இலக்கங்கள்: 18 30 55 71
விசேட எழுத்து: K

**சுப தவசக்**
திகதி: 03.08.2026
சீட்டிழுப்பு இலக்கம்: 0384
வெற்றி இலக்கினம்: மீனம்
வெற்றி இலக்கங்கள்: 02 49 56

# சிறைக்கைதிகள் அடர்த்தியை குறைப்பது தொடர்பில் ஆராய்வு!

கொழும்பு, ஓக.4

**சிறைச்சாலைகளில் நிலவும் நெரிசல் மற்றும் கைதிகளின் அடர்த்தியைக் குறைப்பதற்கான முறையான வேலைத்திட்டம் தொடர்பில் ஆளுகை, நீதி மற்றும் சிவில் பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.**

நாடாளுமன்ற உறுப்பினர் நஜித் இந்திக்க தலைமையில் இக்கூட்டம் அண்மையில் நடைபெற்றது. சிறை நெரிசலைக் குறைக்க அதிகாரிகளின் ஆட்சேர்ப்பு, உட்கட்டமைப்பு வசதிகளை விரிவுபடுத்துதல், வழக்கு விசாரணைகளைத் துரிதப்படுத்துதல் மற்றும் சமூக சேவை போன்ற மாற்றுத் தண்டனைகளை வழங்குவது குறித்து இங்கு ஆராயப்பட்டது. சிறிய குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகுவோரைச் சிறையில் அடைப்பதற்குப் பதிலாக வீட்டுக் காவலில் வைப்பதற்கான தொழில்நுட்ப ஏற்பாடுகள் செய்யப்படுவதாக நீதி அமைச்சு அதிகாரிகள் தெரிவித்தனர். மேலும், போதைப்பொருள் விற்பனையாளர்கள் மற்றும் அடிமையானவர்களுக்கு இடையிலான வேறுபாட்டை அடையாளம் காண சட்டதிருத்தங்களை மேற்கொள்வது பற்றியும் கவனம் செலுத்தப்பட்டது. பெண் கைதிகள், அவர்களுடன் உள்ள 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் நலன் மற்றும் பிணைத் தொகையைச் செலுத்த முடியாமல் சிறையிலுள்ளவர்கள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டது. இந்த விவகாரத்தில் இறுதி அறிக்கை சமர்ப்பிப்பதற்கு முன், சிறை அதிகாரிகளைச் சந்தித்துப் பேசுவதற்கும், சிறைச்சாலைப் பார்வையிடல்களை மேற்கொள்வதற்கும் குழு தீர்மானித்துள்ளது. இக்கூட்டத்தில் எம்.பி. அஜித் பி. பெரேரா, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (எ-இ)

## மஹர சிறை மோதலில் ரூ.15 கோடி சொத்திழப்பு

கொழும்பு, ஓக.4

மஹர சிறைச்சாலையில் ஏற்பட்ட வன்முறைச் சம்பவத்தினால் 15 கோடி ரூபாவுக்கும் அதிகமான சொத்துச் சேதம் ஏற்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. கைதிகள் கட்டடங்களின் கூரைகளைச் சேதப்படுத்தியதுடன், தையல் உபகரணங்களையும் அழித்துள்ளனர். அத்துடன் அவர்கள் நடத்திய கல்வீச்சில் சுற்றியுள்ள வீடுகளும் சேதமடைந்துள்ளன. போதைப்பொருள் தட்டுப்பாடு காரணமாகவே 'சாத்தான்', 'அசார்', 'பட்டா' உள்ளிட்ட நான்கு கைதிகளின் தலைமையில் இந்தப் பதற்றநிலைமை உருவாகியுள்ளதாக பொலிஸாரின் முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. வன்முறையில் ஈடுபட்ட 104 கைதிகள் பூஸா உள்ளிட்ட 7 சிறைச்சாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். சம்பவத்தின் போது அதிகாரிகளை நோக்கிக் கற்களால் தாக்கிய கைதிகள், கைப்பற்றப்பட்ட போதைப்பொருள்கள் சேமித்து வைக்கப்பட்டிருந்த கட்டடத்தை உடைத்து அங்கிருந்த போதைப்பொருள்களைப் பயன்படுத்தியுள்ளனர். மேலும் 1,500 கைதிகள் மதிலை உடைத்துத் தப்பியோட முயன்றபோது அதிகாரிகள் துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளனர். ஏனைய கைதிகளை வெளியேற வற்புறுத்தியவர்கள் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

## பாதுகாப்பான சிறைக்கு 'ஹரக்கட்டா' மாற்றம்!

கொழும்பு, ஓக.4

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக்குழு உறுப்பினரான 'ஹரக்கட்டா' என அழைக்கப்படும் நதுன் சிந்தக விக்ரமரத்னவை, பொருத்தமான அதியுயர் பாதுகாப்புடைய சிறைச்சாலைக்கு மாற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு கொழும்பு மேல்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. குற்றப் புலனாய்வுத் திணைக்களக் காவலில் இருந்தபோது தப்பிச் செல்லச் சதித்திட்டம் தீட்டியதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட ஹரக் கட்டா உள்ளிட்ட பிரதிவாதிகள் மீதான பயங்கரவாதத் தடைச்சட்டக் குற்றச்சாட்டுகளைத் தொடர முடியாது என அண்மையில் உத்தரவிடப்பட்டிருந்தது. இவ்வழக்கு மேல் நீதிமன்ற நீதிபதி புத்திக சி. ராகல முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தபோது, குறித்த உத்தரவுக்கு எதிராக மேன்முறையீடு செய்யவுள்ளதாக அரச சட்டத்தரணி அறிவித்தார். இதைத் தொடர்ந்து பிரதிவாதிகளின் பிணை விண்ணப்பங்கள் மீதான உத்தரவு எதிர்வரும் 20ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (எ-இ)

**சுபிரி தன சம்பத**
திகதி: 03.08.2026 | தினம்: திங்கட்கிழமை
வெற்றி வாரம்: 0976
ஆங்கில எழுத்து: F
வெற்றி இலக்கம்: 8 2 1 8 9 9

**Super Ball**
திகதி: 03.08.2026 | தினம்: திங்கட்கிழமை
சீட்டிழுப்பு வாரம்: 3242
ஆங்கில எழுத்து: T
வெற்றி இலக்கம்: 06 08 16 64

**சனிதா**
திகதி: 03.08.2026 | தினம்: திங்கட்கிழமை
ஆங்கில எழுத்து: I
வெற்றி இலக்கம்: 10 50 55 78
வெற்றி வாரம்: 5403

**SASIRI**
திகதி: 03.08.2026 | தினம்: திங்கட்கிழமை
வெற்றி வாரம்: 1072
வெற்றி இலக்கம்: 07 08 35

**லக்ன ராசி**
திகதி: 03.08.2026 | தினம்: திங்கட்கிழமை
விருச்சிகம்
வெற்றி இலக்கம்: 06 22 30 31
சீட்டிழுப்பு வாரம்: 4954

**KAPRUKA**
திகதி: 03.08.2026 | தினம்: திங்கட்கிழமை
ஆங்கில எழுத்து: K
சுப்பர் இலக்கம்: 12
வெற்றி இலக்கம்: 05 09 16 30
வெற்றி வாரம்: 2418

**அத கோடிபதி**
திகதி: 03.08.2026 | தினம்: திங்கட்கிழமை
ஆங்கில எழுத்து: W
வெற்றி இலக்கம்: 20 39 49 56
வெற்றி வாரம்: 3068

## மஹர சிறைச்சாலையில் இரசாயனப் பகுப்பாய்வு

கொழும்பு, ஓக.4

மஹர சிறைச்சாலையில் இடம்பெற்ற மோதல் சம்பவம் தொடர்பில் அரச இரசாயனப் பகுப்பாய்வுத் திணைக்களத்தின் கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இச்சம்பவம் குறித்த நீதவான் விசாரணை நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.கடந்த சனிக்கிழமை ஏற்பட்ட பதற்றநிலையைத் தொடர்ந்து, 104 கைதிகள் தும்பர, வெலிகடை, பூஸா, களுத்துறை, பதுளை, மட்டக்களப்பு மற்றும் பொலநறுவை ஆகிய சிறைச்சாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இவ்மோதலில் கைதி ஒருவர் உயிரிழந்ததுடன், காயமடைந்த 10 பேர் ராகம மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்தச் சம்பவம் குறித்து பல கோணங்களில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகினறன. (எ-இ)

# கரன்னாகொட, யோஷிதவுக்கு எதிராகக் குற்றப்பத்திரிகை



கொழும்பு, ஓக.4

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் மகன் யோஷித ராஜபக்ச மற்றும் முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னாகொட ஆகியோருக்கு எதிராக இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவினால் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. யோஷித ராஜபக்சவுக்கு பிரித்தானிய அரச கடற்படைப் பயிற்சிக் கல்லூரியின் பாடநெறியில் பங்கேற்பதற்கு சட்டவிரோதமான முறையில் வாய்ப்பளித்து அரசுக்கு நட்டத்தை ஏற்படுத்தியதாக வசந்த கரன்னாகொட மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. அத்துடன், சட்டவிரோதமான முறையில் இலாபத்தைப் பெற்றுக் கொண்டதாக யோஷித ராஜபக்ச மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. தற்போது இந்தக் குற்றப்பத்திரிகைகள் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன், அவற்றை நேரில் கையளிப்பதற்காகப் பிரதிவாதிகள் இருவருக்கும் விரைவில் அழைப்பாணை அனுப்பப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஓகஸ்ட் 7 வரை தாய்ப்பால் வாரம்

கொழும்பு, ஓக.4

தாய்ப்பால் ஊட்டுதலின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், நாடு முழுவதும் தேசிய அளவிலான பிரச்சாரத்துடன் உலக தாய்ப்பால் வாரம், எதிர்வரும் 7ஆம் திகதி வரை கடைப்பிடிக்கப்படும் என்று குடும்பநலப் பணியகத்தின் குழந்தை ஊட்டச்சத்துப் பிரிவின் சமூக மருத்துவ நிபுணர் இரண்யா ஜெயவிக்ரம தெரிவித்துள்ளார்.

பச்சிளம் குழந்தைகளுக்குத் தாய்ப்பால் அளிப்பதால் கிடைக்கும் நன்மைகள் குறித்துப் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதே இந்த வாரத்தின் நோக்கம். குழந்தைகளுக்கு முதல் 6 மாதங்களுக்குத் தாய்ப்பால் மட்டுமே வழங்கவேண்டும் என்று சுகாதார அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர். ஏனெனில் தாய்ப்பால் முழுமையான ஊட்டச்சத்தை வழங்குவதோடு, நோய் எதிர்ப்புச் சக்தியை வலுப்படுத்திச் சீரான வளர்ச்சிக்குத் துணைபுரிகின்றது.

அத்துடன் குழந்தைகளுக்கு ஏற்படும் தொற்றுக்கள் மற்றும் பல்வேறு நோய்களிலிருந்து பாதுகாப்பு அளிப்பதோடு, தாயின் ஆரோக்கியத்துக்கும் வழிவகுக்கின்றது.

உலக தாய்ப்பால் வாரம் ஒவ்வொரு ஆண்டும் ஓகஸ்ட் மாதத்தின் முதல் வாரத்தில் அனுசரிக்கப்படுகின்றமைக்கு ஏதுவாக, கடந்த சனிக்கிழமை முதல் இதனைக் கடைப்பிடிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-இ)



## டெங்குத் தொற்றால் சிசுவும் தாயும் சாவு!

களுத்துறை, ஓக.4

டெங்குத் தொற்றால் பாதிக்கப்பட்ட பெண் ஒருவர், முதலாவது மகப்பேறுக்கு இரண்டு நாள்களே இருந்த நிலையில், உயிரிழந்துள்ளார். இந்தத் துயரச் சம்பவம் களுத்துறை வாத்துவப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. 34 வயதான குறித்த பெண்ணுக்கு கடந்த 24ஆம் திகதி காய்ச்சல் ஏற்பட்டுள்ளது.

எனினும், மலச்சிக்கல் உபாதை காரணமாக தனியார் மருத்துவமனையொன்றில் அவர் சேர்க்கப்பட்டிருந்தார். அங்கு அறுவைச் சிகிச்சை மூலம் குழந்தையைப் பிரசவிப்பதற்கான பரிசோதனைகளின் போது, அவருக்கு டெங்குத் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. தொடர்ந்து அரச மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில், சிசு முதல் நாளும், மறுநாள் தாயும் சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்துள்ளனர். (க-இ)

## பெரும் மண்சரிவால் போக்குவரத்துத் தடை

ஹற்றன், ஓக.4


பூண்டுலோயா தவலந்தென்னை வீதி, நியம்கம் தொர விகாரைக்கு அருகில், நேற்று அதிகாலை பெரும் மண்சரிவு ஏற்பட்டுள்ளது. இதனால் பூண்டுலோயா செல்வதற்கான போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டுள்ளது. இந்த வீதியில் மேலும் மண்சரிவு ஏற்படும் அபாயமுள்ளதால், அந்தப் பகுதி மக்கள் பெரும் அச்சத்தில் உள்ளனர். மண்சரிவு ஏற்பட்ட குறித்த பகுதிகளில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினரால் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (க-இ)

## பிரதான ஆறுகளின் நீர்மட்டம் உயர்வு

கொழும்பு, ஓக.4

நேற்றுமுன்தினம் பெய்த மழையால், மகாவலி, களனி மற்றும் களு ஆகிய பிரதான ஆறுகளின் நீர்மட்டம் அதிவேகமாக அதிகரித்துள்ளது. இதனால் தாழ்நிலப் பகுதிகளில் வாழும் மக்களை அவதானத்துடன் இருக்குமாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. டித்வா சூறாவளியின் போது ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு அபாயம் தற்போது உருவாக வாய்ப்பில்லை. எனினும் தாழ்நிலப்பகுதிகளில் வெள்ளப்பெருக்கு அபாயம் ஏற்படலாம். ஆறுகளின் கீழ்நோக்கிய பகுதிகளில் நீர்மட்டம் மேலும் அதிகரிக்கக்கூடும் என்பதால், மக்கள் அவதானத்துடன் இருக்கவேண்டும் என்றும் நீர்ப்பாசனத் திணைக்களம் எச்சரித்துள்ளது. (க-இ)

## டிப்பர் மோதி இருவர் சாவு!




கொழும்பு,ஓக.4

டிப்பர்வாகனத்துடன், மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இரண்டு இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர். இந்த விபத்து திருகோணமலை - மட்டக்களப்பு பிரதான வீதியில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. விபத்தில் மூதூர் கிளிவெட்டிக் கிராமத்தைச் சேர்ந்த பொறியியல் பீட முதலாம் வருட மாணவனும், வெளிநாட்டில் இருந்து வருகைதந்த அவரது உறவினரும் உயிரிழந்துள்ளனர். மேலதிகவிசாரணைகளை மூதூர்ப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (க-இ)




## பலிக்காத கனவுகள்

கனவுகள் பலவிதம். ஒவ்வொண்டும் ஒரு விதம். அதிலையும் இப்ப இஞ்சையுள்ள அரசியல்வாதியள் கனபேருக்கு இப்ப அல்லும் பகலும் அனவரதமும் ஒரே முதலமைச்சர் கனவுதான் வந்துகொண்டிருக்காம். முதல் கொஞ்சப் பேருக்குத்தான் உந்தக் கனவு வந்தது. வீட்டுக்கட்சியின்ர அப்புக் காத்தருக்குத்தான் உந்தக் கனவு கூடுதலா இருந்தது. அதுவும் பார்லிமெண்ட் எலக்சனில ரிசல்ட் பல்லிளிச்ச பிறகு. அந்தத் தோல்வியை ஈடு செய்யிறதுக்கு முதலமைச்சர் கனவுதான் ஒரே தீர்வு எண்டு அப்புக்காத்தர் நம்பினர். அதுக்காக ஆள் இப்பவரைக்கும் இறங்கி வேலை செய்யுது. திசைகாட்டி அலையை வேற பக்கம் திருப்பி விட்டால், வீட்டுக்கட்சிக்குத்தான் கூட சீற் கிடைக்கும், அதால தான் முதலமைச்சர் ஆகுறது உறுதி எண்டு அப்புக் காத்தர் நம்பிறார். அவர் போட்ட கணக்குப் பலிக்கிறதுக்கும் சான்ஸ் கூட இருக்குத்தான். ஆனால் கடைசி நேரத்தில கட்சிக்குள்ள என்னென்ன பூகம்பங்கள் வெடிக்குது எண்டதைப் பொறுத்துத்தான் அந்தக் கணக்குச் சரியா பிழையா எண்டு தெரியவரும்.

ஆனால் எந்தப் பக்கம் கூட்டினாலும் சரியே வராத கணக்குகளோட கனபேர் உந்த முதலமைச்சர் கனவில மிதக்கினம். ஒருத்தர் ஊசிக்காரர். அவருக்குப் போன முறை பார்லிமெண்டில சீற் கிடைச்சதே பெரிய அதிசயம். அதுக்குப் பிறகு ஆள் தன்ர வாயாலையும், செயலாலையும் சனத்தை வெறுக்கப் பண்ணிட்டார். 'ஏனடா இப்பிடிப்பட்டதுக்கெல்லாம் வோட் போட்டம்?' எண்டு சனங்கள் தலையில அடிச்சுக்கொள்ளுற அளவுக்கு ஊசிக்காரரின்ர கூத்துக்கு அளவில்லாமல் போட்டுது. எண்டாலும் கொஞ்சப்பேர் இன்னமும் அந்தாள் செய்யிறதுதான் சரியெண்டும் நிக்கினம். அவையின்ர முட்டுக்குடுப்பைப் பாத்திட்டு, தனக்கு இப்ப முந்தினதை விட ஆதரவு கூட எண்டு அவர் நினைக்கிறார். அதால ஆள் எம்.பி. பதவியை விட்டுட்டு முதலமைச்சாராகிறதுக்கு கனவு காணுறார். பார்லிமெண்ட் எலக்சன் கேக்கேக்க, உந்த ஊசிக்காரர் தன்ர அரசாங்க வேலையை ரிசைன் பண்ணேலையாம். அதால அவர் எலக்சன் ரூல்ஸை மீறிட்டார் எண்ட கேஸ் இருக்கு. பெரும்பாலும் அதில ஊசிக்காரர் வெல்லுறதுக்கு சந்தர்ப்பம் இல்லையாம். அப்ப எப்பிடியோ பறிபோற பதவியை, இப்பவே தன்ர 'தங்கத்திட்ட' கைமாத்திப்போட்டு, 'எம்.பி. பதவியையே சனத்துக்காக தூக்கியெறிஞ்சவன் நான்' எண்ட அனுதாப அலையை வைச்சு வெல்லலாமெண்டு அவர் கனவு காணுறார்.

உந்த ஊசிக்காரருக்கு ஒரு விசயம் மட்டும் வடிவாத் தெரியேலை. முதலமைச்சரா வாறது எண்டது தனிய ஒராள் வெல்லுறதில தங்கியிருக்கேலை. பார்லிமெண்ட் எலக்சனில எம்.பி.யா வரேக்க கூட, ஊசிக்காரரின்ர சுயேச்சைக்குழுவில வேற ஒருத்தரும் வெல்லேலை. ஊசிக்காரர் மட்டும்தான் வெண்டவர். அப்பிடி மாகாண எலக்சனிலையும் ஊசிக்காரர் மட்டும் தான் வெல்லச் சான்ஸ் இருக்கு. சிலவேளை அவர் கூட மண்ணைக் கவ்வலாம். இப்பிடி ஒராள் வெண்டால், மாகாண சபையின்ர மெம்பர் ஆகலாமே தவிர முதலமைச்சர் ஆகவே ஏலாதே. அதுக்கு மாகாணசபையின்ர பெரும்பான்மைப்பலம் வேணுமெண்டால் குறைஞ்சது ஊசிக்காரரின்ர அணியில 20 பேராவது வெல்லோணும். இப்ப இருக்கிற நிலைமையில ஊசிக்காரர் வெல்லுறதே ஐமிச்சம். அதுக்குள்ள இன்னும் 19 பேர் வெல்லுறதெண்டால் அது சரிவாற அலுவலில்லைத்தானே. மூஞ்சூறு தான் போகவே வழியில்லையாம், அதுக்குள்ள விளக்குமாத்தையும் சேர்த்துக் கொண்டு போறதெல்லாம் நடக்கிற கதையோ? இப்பிடி இன்னும் ஆராருக்கெல்லாம் இந்த முதல்மைச்சர் கனவு தொத்தியிருக்கெண்டு பட்சி இனியும் சொல்லும்.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஓக.4

சைவ வாழ்வியலில் திருமந்திரம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக திருமந்திரச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர்-17 எதிர்வரும் 7ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4மணிக்கு தெல்லிப்பழை மாவை கலட்டி நாகதம்பிரான் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

திருமூல நாயனார் குருபூசையை அடுத்து மாணவர்களின் கலைநிகழ்வும், திருவாசகப்பிரியன் பொன். சந்திரவேலின் 'திருவருள் ஜலம்' எனும் பொருளில் சொற்பொழிவும் இடம்பெறும். சொற்பொழிவிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஏ-41)

★★★★

யாழ்ப்பாணம், ஓக.4

நீர்வேலி கந்தசுவாமி கோவில் நடத்தும் வாராந்தச் சுக்கிரவாரக் கந்தபுராண படனத்தொடர் 64ஆவது சொற்பொழிவு எதிர்வரும் 7ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு கோவில் சண்முக விலாச மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் கோவிலின் பிரதம குருக்கள் ஸ்கந்த குருஞானபானு, சிவஸ்ரீ இராஜேந்திர சுவாமிநாதக் குருக்களின் ஆசியுரையும், பரிபாலன சபைத் தலைவர் சி. தயாநாதனின் தலைமையுரையும், திருவாசகப்பிரியன் சி. கா. கமலநாதனின் 'அசமுகி நகர்காண் படலம்' எனும் விடயப்பொருளில் சிறப்புச்சொற்பொழிவும் நடைபெறும்.

சொற்பொழிவிலிருந்து நீர்வைக்கந்தன் புராண இதிகாசப் பாடசாலை மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஏ-41)

# செயற்பட்டு மகிழ்வோம்

யாழ்ப்பாணம், ஓக.4

நாவற்குழி சிவமணி பாலர் பாடசாலையின் செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3மணிக்கு நாவற்குழி மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளது. பாலர் பாடசாலை அபிவிருத்திச்சங்கத் தலைவர் தி.தங்கவேலு தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக சாவகச்சேரி கோட்டக்கல்விப் பணிப்பாளர் ந.ஜெயரூபன், சிறப்பு விருந்தினர்களாக நாவற்குழி மகா வித்தியாலய அதிபர் சு.சிவானந்தன், தென்மராட்சி பிரதேச செயலக முன்பள்ளிப்பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி த.இராஜேஸ்வரி, கௌரவ விருந்தினர்களாக நாவற்குழி குடும்ப முன்பள்ளிகளின் தலைவி திருமதி க.சர்மிளா, கைதடி குடும்ப முன்பள்ளிகளின் தலைவி மா.சாந்தி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஏ-41-159)

# பொதுக்கூட்டமும் நிர்வாகத்தெரிவும்

யாழ்ப்பாணம், ஓக.4

அகில இலங்கை காந்தி சேவா சங்கம் மற்றும் காந்தி சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகக்குழுத் தெரிவும் எதிர்வரும் 9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணம்-கண்டி வீதி அரியாலையிலுள்ள யாழ். மாவட்ட சர்வோதய நிலையத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத்தின் தலைவரும் வவுனியா பல்கலைக்கழக வேந்தருமான பேராசிரியர் சு. மோகனதாஸ் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் மதுரையைச் சேர்ந்த பேராசிரியர் க.பழனித்துரை சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு விசேட உரையாற்றவுள்ளார். சங்கத்தின் அனைத்து உறுப்பினர்களையும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு பொதுச்செயலாளர் தெரிவித்துள்ளார். (ஏ-41-159)



# வடக்கு மாகாண ஆசிரியர்களின் சுயவிபரங்கள் இற்றைப்படுத்தல்

யாழ்ப்பாணம், ஓக.4

வடக்கு மாகாணத்திலுள்ள அனைத்துக் கல்வி வலயங்களிலும், 54 வயதுக்கு மேற்பட்ட ஆசிரியர்களின் தனிப்பட்ட சுயவிபரக் கோவைகளை இற்றைப்படுத்தும் நடமாடும் சேவை அண்மையில் நடத்தப்பட்டது. இதனூடாக 406 ஆசிரியர்கள் பயனடைந்துள்ளனர் என்று வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்தில் ஓய்வுபெறும் ஆசிரியர்கள் உரிய காலப்பகுதிக்குள் தமக்கான ஓய்வூதியப் பணத்தைப் பெற்றுக்கொள்ள முடியாமையால் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்கின்றனர். இதுதொடர்பான விசாரணைகளில், தனிப்பட்ட சுயவிபரக் கோவைகளில் உள்ள ஆவணக்குறைபாடுகள் கண்டறியப்படுவதால் ஓய்வூதியம் காலதாமதமடைவதும், சிலரது ஓய்வூதியம் விசாரணைகள் முடிவுறாமையால் வழங்கப்படாமல் இருப்பதும் கண்டறியப்பட்டது. இதனையடுத்து ஆவணக் குறைபாடுகளால் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்க்கும் வகையில், ஆசிரியர்கள் தமது சேவைக் காலத்திலேயே சுயவிபரக் கோவைகளை இற்றைப்படுத்துவது அவசியமெனத் தீர்மானிக்கப்பட்டது. அதற்கமைவாக, முதற்கட்டமாக வடக்கு மாகாணக் கல்வி அமைச்சுக்கு, வடக்கு மாகாண ஆளுநரால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு அமைவாக, ஆசிரியர்களின் சுயவிபரக் கோவைகளை இற்றைப்படுத்தும் நடமாடும் சேவை இரண்டு கட்டங்களாக முன்னெடுக்கப்பட்டது. முதற்கட்டமாக யாழ்ப்பாணம், வலிகாமம், தென்மராட்சி, வடமராட்சி, முல்லைத்தீவு, கிளிநொச்சி வடக்கு மற்றும் கிளிநொச்சி தெற்கு ஆகிய கல்வி வலயங்களில், இரண்டாம் கட்டமாக தீவகம், மடு, மன்னார், துணுக்காய், வவுனியா வடக்கு மற்றும் வவுனியா தெற்கு ஆகிய வலயங்களிலும் நடமாடும் சேவை வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டது. (க-66)

# நேருக்கு நேர் மோதிய பயணிகள் பேருந்துகள்

## 20 பேர் காயம்!

கேகாலை, ஓக.4

இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்தும் தனியார் பேருந்தும் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் 20 பேர்காயமடைந்தனர். இந்த விபத்து கேகாலை, கரண்டுபனச் சந்தியில் நேற்று இடம்பெற்றது. ரம்புக்கனையிலிருந்து கண்டி நோக்கிப் பயணித்த இ.போ.ச. பேருந்தும், திகனவிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த தனியார் பேருந்தும் ஒன்றுடன் ஒன்று மோதியதில் விபத்துக்குள்ளாகியுள்ளன. விபத்தில் காயமடைந்த 20 பேரும் உடனடியாக மீட்கப்பட்டு, கேகாலை போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (க-இ)

# இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். சிலருக்குத் திடீர் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வெளியூரில் இருந்து எதிர்பார்த்த செய்தி கிடைக்கும்.

**இடபம்:** எதிர்பாராத செலவுகள் அதிகரிக்கும். தேவையான பணம் கையில் இருப்பதால், உற்சாகமாகச் சமாளித்துவிடுவீர்கள். வாழ்க்கைத் துணைவழி உறவுகளிடம் எதிர்பார்த்த காரியம் நல்லபடியாக முடியும்.

**மிதுனம்:** இன்று எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சிலருக்குத் தந்தையின் மூலம் ஆதாயம் கிடைக்கும். சகோதரவகையில் வீண்செலவுகள் ஏற்படும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும்.

**கடகம்:** இன்று உற்சாகமாகக் காணப்படுவீர்கள். பிள்ளைகளின் செயற்பாடுகள் வீட்டில் கலகலப்பான சூழ்நிலையை ஏற்படுத்தும். சுபநிகழ்ச்சிக்கான பேச்சுவார்த்தை சாதகமாக முடியும்.

**சிம்மம்:** தேவையான பணம் கையில் இருக்கும். காரியங்கள் முடிவதில் தாமதம் ஏற்பட்டாலும் முடித்துவிடுவீர்கள். இளைய சகோதரர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைப்பது தாமதமாகும். உறவினர்கள் மூலம் கிடைக்கும் தகவல் சங்கடத்தைத் தரக்கூடும்.

**கன்னி:** தந்தைவழி உறவுகளால் குடும்பத்தில் சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதில் பெரியவர்களின் ஆலோசனை அவசியம்.

**துலாம்:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உங்கள் முயற்சிகளுக்கு வாழ்க்கைத்துணை ஒத்துழைப்புத் தருவார்.

**விருச்சிகம்:** காரியங்களில் சிறுசிறு தடைகள் ஏற்பட்டாலும் முடிந்துவிடும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. பிள்ளைகள் பிடிவாதமாக நடந்துகொண்டாலும் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது.

**தனுசு:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். ஆனால், திடீர்ச் செலவுகளால் கையிருப்புக் கரையும்.

**மகரம்:** தந்தைவழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதரர்களுக்காக சில வேலைகளை எடுத்துச் செய்யவேண்டி வரும்.

**கும்பம்:** சிலருக்குப் புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும். மாலையில் குடும்பத்துடன் தெய்வப் பணிகளில் ஈடுபடும் வாய்ப்பு ஏற்படும்.

**மீனம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உறவினர்கள் வகையில் சிற்சில சங்கடங்களைச் சமாளிக்கவேண்டி வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை



# தொடர்கதையாகும் சிறைக்கலவரங்கள்..!

நீர்கொழும்புச் சிறைச்சாலையில் ஏற்பட்ட கலவரத்தின் வெம்மை தணிவதற்குள்ளேயே, மஹர சிறைச்சாலையில் இடம்பெற்றுள்ள வன்முறைச் சம்பவம் ஒட்டுமொத்த நாட்டையுமே உலுக்கியுள்ளது. சுமார் 4,000 கைதிகள் தடுத்துவைக்கப்பட்டுள்ள மஹர சிறைச்சாலையில் ஏற்பட்ட இந்த அமைதியின்மையின்போது, கைதிகளுக்கு இடையே மோதல் வெடித்து, புதிதாகத் திறக்கப்பட்ட புனர்வாழ்வு மையம், மருத்துவமனை, சமையலறை மற்றும் பிரதான அதிகாரி அலுவலகம் என்பன அடித்து நொறுக்கப்பட்டுத் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. துப்பாக்கிச்சூடு, ஹெலிகொப்டர் மற்றும் ட்ரோன் கண்காணிப்புகள், ராகம பகுதியில் ஊரடங்கு உத்தரவு எனப் போர்க்களமாக மாறிய இந்தச் சம்பவத்தில் கைதி ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் பலர் காயமடைந்துள்ளனர். தொடர்ச்சியாக இலங்கைச் சிறைச்சாலைகள் வன்முறைக் கூடங்களாக மாறிவருவது வெறும் தற்செயலான நிகழ்வல்ல; மாறாக, அது சீரழிந்து கிடக்கும் எமது சிறைச்சாலை நிர்வாகத்தின் மீதான மாபெரும் எச்சரிக்கை மணியாகும்.

சிறைச்சாலைகளில் தொடர்ச்சியாக இத்தகைய கலவரங்கள் வெடிப்பதற்குப் பின்னால் பல கட்டமைப்பு ரீதியான காரணங்கள் உள்ளன. கொள்ளளவுக்கு அதிகமான கைதிகளைச் சிறைகளில் அடைத்துவைப்பதே அனைத்துப் பிரச்சினைகளுக்கும் மூலவேராகும். ஆயிரம் கைதிகள் வாழவேண்டிய இடத்தில் நான்காயிரம் பேரை அடைத்துவைக்கும் போது, அங்குள்ள சுகாதாரமின்மை, தரமற்ற உணவு, மருத்துவ வசதியின்மை மற்றும் மனித உரிமைகள் மீறல் என்பன கைதிகளிடையே தீராத ஆத்திரத்தையும் உளவியல் நெருக்கடியையும் தோற்றுவிக்கின்றன. இதனுடன், சிறைச்சாலைகளுக்குள் போதைப்பொருள் கடத்தல், பாதாள உலகக் குழுக்களின் ஆதிக்கம் மற்றும் ஊழல் படிந்த சில சிறை அதிகாரிகளின் அத்துமீறல்கள் என்பன எரியும் தீயில் எண்ணெயை ஊற்றுவது போல் கலவரங்களைத் தூண்டுகின்றன.

அதேவேளை, இத்தகைய தொடர் கலவரங்களின் பின்னணியில் ஏதேனும் 'அரசியல் உள்நோக்கங்கள்' அல்லது திசை திருப்பும் உத்திகள் உள்ளனவா என்ற சந்தேகத்தையும் நிராகரித்துவிட முடியாது. நாட்டில் பிரதான அரசியல் அல்லது பொருளாதார நெருக்கடிகள் எழும்போது, அல்லது அரசாங்கத்துக்கு எதிரான மக்கள் கொந்தளிப்புகள் தீவிரமடையும் போது, சிறைச்சாலையை மையமாகக் கொண்டு இவ்வாறான கலவரங்கள் தன்னிச்சையாக வெடிப்பதும், பின்னர் அவை தீவிரமான பாதுகாப்பு நடவடிக்கைகளின் மூலம் ஒடுக்கப்படுவதும் இலங்கையின் கசப்பான அரசியல் வரலாற்றில் புதிய விடயமல்ல. உண்மையிலேயே கைதிகளின் உரிமைகளுக்காக இக் கலவரங்கள் வெடிக்கின்றனவா அல்லது பாதாள உலகக் குழுக்களின் அதிகாரப்போட்டியையும், அரசியல் சூழ்ச்சிகளையும் மறைக்கக் கைதிகள் பகடைக்காய்களாகப் பயன்படுத்தப்படுகிறார்களா என்பது தீவிரமாக விசாரிக்கப்பட வேண்டும்.

இவ்வாறான சிறைக்கலவரங்களைத் தடுத்து, சிறைச்சாலைகளை உண்மையான புனர்வாழ்வு மையங்களாக மாற்றுவதற்கு அரசாங்கம் உடனடி நடவடிக்கைகளைக் கையாளவேண்டும். முதலாவதாக, சிறு குற்றங்களுக்காகவும், பிணைப் பணத்தைச் செலுத்த முடியாமலும் நீண்டகாலமாக விளக்கமறியலில் வாடும் கைதிகளுக்கு விரைவான நீதி விசாரணை மூலம் பிணை வழங்குதல் அல்லது பொதுமன்னிப்பு அளித்தல் மூலம் சிறைகளின் நெரிசலைக் குறைக்கவேண்டும். இரண்டாவதாக, சிறைச்சாலைகளுக்குள் போதைப்பொருள்களையும், சட்டவிரோதப் பொருள்களையும் கடத்தும் ஊழல் படிந்த சிறை அதிகாரிகளுக்எதிராகக் கடுமையான சட்டநடவடிக்கைகளை எடுக்கவேண்டும். மூன்றாவதாக, நீர்கொழும்பு மற்றும் மஹர சிறைக்கலவரத்தின் பின்னணியில் உள்ள உண்மைத்தன்மை, உயிரிழப்புக்கான காரணம் மற்றும் சொத்துச் சேதங்களின் பின்னணி குறித்து ஆராய சுயாதீன விசாரணைக்குழுக்கள் அமைக்கப்பட வேண்டும். இறுதியாக, கைதிகளை மிருகங்களாகப் பார்க்காமல், மனித உரிமைத் தரநிலைகளுக்கு ஏற்ப அவர்களுக்குத் தேவையான மருத்துவ, சுகாதார வசதிகளை வழங்குவதுடன், மன அழுத்தத்தைக் குறைக்கும் உளவியல் வழிகாட்டல்களையும் வழங்க வேண்டும்.

சிறைச்சாலைகள் என்பது தண்டனைக்கூடங்கள் மட்டுமல்ல, அவை தவறிழைத்த மனிதர்களை நல்வழிப்படுத்தும் சீர்திருத்தக் கூடங்களாகும். துப்பாக்கித் தோட்டாக்களாலும், ஊரடங்கு உத்தரவுகளாலும் தற்காலிகமாக அமைதியை ஏற்படுத்த முடியுமே தவிர, கட்டமைப்பு ரீதியான சீர்திருத்தங்கள் இன்றிச் சிறைகளுக்குள் எரியும் தீயை அணைக்கமுடியாது. அரசாங்கம் இனியாவது விழித்துக்கொண்டு சிறை நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மையையும், மனித உரிமைகளையும் நிலைநாட்டத் துரிதமாகச் செயற்படவேண்டும்!


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com



## பொய்யாமொழி

**பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி**
**நட்பாடல் தேற்றா தவர்**

**பொருள்:** மகிழும்படியாகப் பேசி நட்புக்கொள்ளுதல் நன்மை என்று தெளியாதவர் தம்மைவிட்டு நீங்கும்படியாகப் புறங்கூறி நண்பரையும் பிரித்துவிடுவர்.




# வாகன இறக்குமதி செலவினம் குறைவு



**கொழும்பு, ஓக.4**

**இலங்கையில் மோட்டார் வாகன இறக்குமதிக்கான செலவினம் கடந்த மாதங்களுடன் ஒப்பிடுகையில், ஜீன் மாதத்தில் 27.1 வீதத்தால் குறைவடைந்துள்ளது என்று இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.**

மத்திய வங்கியின். வெளிநாட்டுத்துறை செயற்றிறன் அறிக்கையின்படி, ஜீன் மாதத்தில் வாகன இறக்குமதிக்காக 182 மில்லியன் அமெரிக்க டொலர் செலவிடப்பட்டுள்ளது. எனினும் 2026ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில், வாகன இறக்குமதிக்காக 1.25 பில்லியன் அமெரிக்க டொலர் செலவிடப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (க-இ)

# கண்டி, நுவரெலியா பாடசாலைகள் பூட்டு

கொழும்பு.ஓக.4
சீரற்ற வானிலை காரணமாக கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் உள்ள அனைத்து அரச பாடசாலைகளும் இன்று செவ்வாய்க்கிழமை மூடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த மாவட்டங்களில் தற்போது நிலவும் கடும் மழை மற்றும் அசாதாரண வானிலை காரணமாக மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று கல்வி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (க-இ)




# 20,400 சிகரெட்டுகள்; சீனப் பெண் கைது

கொழும்பு. ஓக.4
சுமார் 30 இலட்சத்து 60 ஆயிரம் ரூபா பெறுமதியான, 20 ஆயிரத்து 400 சிகரெட்டுகளை, சட்டவிரோதமான முறையில் இலங்கைக்குள் கடத்திய சீனப் பெண், கட்டுநாயக்க விமான நிலையத்தில், பொலிஸ்போதைப் பொருள் ஒழிப்புப் பணியகத்தின் அதிகாரிகளால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபர் சீனாவின் செஜியாங் மாகாணத்தைச் சேர்ந்த 44 வயதுடைய அழகுக்கலைஞர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். குறித்த பெண், சீனாவில் கொள்வனவு செய்த சிகரெட்டுகளை, மலேசியாவின் கோலாலம்பூருக்குச் சென்று, அங்கிருந்து கட்டுநாயக்க விமானநிலையத்தை வந்தடைந்துள்ளார். அவரது பயணப் பைகளை சோதனையிட்ட போது, சீனத் தயாரிப்பான 102 சிகரெட் கார்ட்டூன்களில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 20 ஆயிரத்து 400 சிகரெட்டுகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. (க-இ)

# நீர்கொழும்புக் கடற்கரையில் 234 கிலோ பீடி இலைகள் மீட்பு

கொழும்பு, ஓக.4
நீர்கொழும்பு, பிரவுன்ஸ் கடற்கரைப் பகுதியில், சந்தேகத்துக்கு இடமான முறையில் காணப்பட்ட 5 மூடைகளில், 234 கிலோகிராமுக்கும் அதிகமான பீடி இலைகள் மீட்கப்பட்டுள்ளன. சந்தேகநபர்கள் பீடி இலைகளைக் கைவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர். கைப்பற்றப்பட்ட பீடி இலைகள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக நீர்கொழும்பு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (க-இ)

# கரையொதுங்கியது மற்றொரு கொள்கலன்

ரத்கம ஓவகந்தச் சந்திக்கு அருகிலுள்ள கடற்கரையில் நேற்றுக் காலை கொள்கலன் ஒன்று கரை ஒதுங்கியுள்ளது. குறித்த கொள்கலன் வெள்ளை நிறமுடைய சுமார் 40 அடி நீளமானது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். இது கப்பலொன்றிலிருந்து கடலில் விழுந்த கொள்கலனாக இருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். அதேவேளை இந்துருவப் பகுதியில் அமைந்துள்ள சுற்றுலா விடுதியொன்றின் பின்புறக் கடற்கரையில் வெள்ளை நிறக் கொள்கலனொன்று நேற்றுமுன்தினம் கரை ஒதுங்கியிருந்தது. இது கொழும்புக்கு அண்மித்த கடற்பகுதியில் கப்பலொன்றிலிருந்து கடலில் விழுந்த வெற்றுக் கொள்கலன் என்று தெரிவிக்கப்படுகின்றது. (க-இ)

நாளை

புதன்கிழமை- ஆடி-20

05.07.2026

சுபநேரம் : 04.34 - 06.04
ராகுகாலம் : 12.04- 01.34

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சிறை வன்முறைகள் திட்டமிட்ட செயலா?

## விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பு, ஓக.4

சிறைச்சாலைகளுக்குள் திட்டமிட்ட வகையில் மோதல்கள் உருவாக்கப்படுகிறதா என்பது குறித்து விரிவான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடுகள் அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற நிகழ்வொன்றின் பின் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அவர், அரசாங்கம் போதைப் பொருளுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகளை முன்னெடுத்துவரும் நிலையில், அதற்கு எதிராகவே ஒரு தரப்பினர் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுவதாகக் குறிப்பிட்டார்.

சிறைச்சாலைகளில் 40 ஆயிரத்துக்கும் அதிகமான கைதிகள் உள்ள நிலையில், அவர்களில் 30 ஆயிரம் பேர் தடுப்புக்காவலில் இருப்பவர்கள் என்றும், அதில் 23,000 பேர் போதைப்பொருள் குற்றச்சாட்டுகளுடன் தொடர்புடையவர்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

சிறை நெரிசலைக் குறைக்க அரசு பல சீர்திருத்தங்களைச் செய்துள்ளதுடன், 100 கிராமுக்கும் குறைவான போதைப்பொருள் வழக்குகளுக்கு மேல் நீதிமன்றம் ஊடாகப் பிணை பெறும் வகையில் சட்டத் திருத்தங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் அவர் மேலும் கூறினார். (எ-இ)

## தன்னை விளம்பரப்படுத்த சிறைகளை நிரப்பும் அரசு

### சாடுகிறார் அஜித் மான்னப்பெரும!

கொழும்பு, ஓக.4

அரசாங்கம் தனது விளம்பரத்துக்காகவே மக்களை விளக்கமறியலில் அடைத்து சிறைச்சாலைகளை நிரப்பி வருவதாகவும், சிறைச்சாலை அமைச்சை நிர்வாகம் செய்வதில் நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார முற்றிலும் தோல்வியடைந்துள்ளார் என்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் மான்னப்பெரும சாடியுள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பேசிய அவர், 11,000 கைதிகளை மட்டுமே கொள்ளக்கூடிய சிறைச்சாலைகளில் 41,000 பேரை அடைத்து வைத்து மனித உரிமைகள் மீறப்படுவதாகக் குற்றஞ்சாட்டினார். கடந்த கால வன்முறைகளின் போது பொறுப்புக்கூறவேண்டிய நீதி அமைச்சர் பதவி விலகியிருந்தால் மஹர சிறைச்சாலை சம்பவத்தைத் தடுத்திருக்க முடியும் எனச்சுட்டிக்காட்டிய அவர், ஆளும் தரப்பின் 159 பெரும்பான்மைப் பலத்தால் மட்டுமே தற்போதைய அமைச்சர் பதவியில் நீடிப்பதாகத் தெரிவித்தார். அரச பாதுகாப்பில் இருக்கும் கைதிகளுக்குப் பாதுகாப்பு அளிக்கத் தவறிய அரசாங்கத்தால் நாட்டின் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியாது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (எ-இ)

## சிறைச்சாலைகளின் பாதுகாப்புத் தீவிரம்

கொழும்பு,ஓக.4

மஹர சிறைச்சாலையில் ஏற்பட்ட வன்முறையைத் தொடர்ந்து, நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்துச் சிறைச்சாலைகளிலும் பாதுகாப்புத் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. விசேடமாக வெலிக்கடை, மகசின், களுத்துறை மற்றும் நீர்கொழும்பு ஆகிய சிறைச்சாலைகள் மீது கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்று சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் சஜீவ மெதவத்த தெரிவித்துள்ளார்.

மஹர சிறைச்சாலையில் அண்மையில் ஏற்பட்ட அமைதியின்மையின் போது, கைதிகள் சிலர் தப்பிச் செல்ல முயன்றதுடன் கட்டடங்களுக்கும் தீ வைத்துள்ளனர். பொலிஸார், விசேட அதிரடிப்படையினர் மற்றும் முப்படையினர் இணைந்து முன்னெடுத்த கூட்டு நடவடிக்கையின் மூலம் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-இ)



# சிறை நிர்வாகச் சீர்கேடுகளுக்காக அமைச்சர் பதவிவிலக வேண்டும்

## சமன் ரத்னப்பிரிய தெரிவிப்பு

கொழும்பு, ஓக.4

மஹர சிறைச்சாலையில் ஏற்பட்டுள்ள அமைதியின்மையைக் கட்டுப்படுத்தத் தவறியமை மற்றும் நிர்வாகச் சீர்கேடுகளுக்குப் பொறுப்பேற்று நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார உடனடியாகப் பதவி விலகவேண்டும் என நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சமன் ரத்னப்பிரிய வலியுறுத்தியுள்ளார். கொழும்பில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பேசிய அவர், மஹர சிறைச்சாலை வன்முறையில் கைதி ஒருவர் உயிரிழந்து பலர் காயமடைந்துள்ள நிலையில், நிலைமை கட்டுப்பாட்டுக்குள் இருப்பதாக அரசு கூறுவது பொய்யானது - என்றார். நீர்கொழும்புச் சம்பவத்தின் போதே பொறுப்பற்ற முறையில் நடந்துகொண்ட அமைச்சருக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆளும்தரப்பு ஆராயாமல் தோற்கடித்ததன் விளைவே தற்போதைய பேரழிவு எனச் சாடினார். அரசபாதுகாப்பில் உள்ள கைதிகளின் உயிர்களுக்கு அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும் என்றும் சுட்டிக்காட்டினார். இத்துறைக்குத் தகுதியானவர்களை நியமிக்கத் தவறிய அமைச்சரை ஜனாதிபதி உடனடியாகப் பதவியிலிருந்து நீக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். (எ-இ)



## ஈஸ்டர் தாக்குதல் சம்பவத்தில் விரிவான விசாரணை தேவை

### சம்பிக்க ரணவக்க வலியுறுத்து!

கொழும்பு, ஓக.4

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் ஒரு சிலரை மட்டும் இலக்குவைக்காமல், விரிவான மற்றும் முழுமையான விசாரணை நடத்தப்படவேண்டும் என ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவர் பாட்டலி சம்பிக்க ரணவக்க வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடந்த ஊடகவியலாளர் சந்திப்பில் பேசிய அவர், தெளிவான முன்னெச்சரிக்கைகள் இருந்தபோதிலும் தாக்குதலைத் தடுக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்று குறிப்பிட்டார். ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையில் பூஜித ஜெயசுந்தர மற்றும் ஹேமசிறி பெர்னாண்டோ தவிர பல அரச அதிகாரிகளின் பெயர்களும் குறிப்பிடப்பட்டுள்ளதால், இருவரை மட்டும் பலிக்கடாவாக்கி பிரச்சினையை முடிக்க முடியாது என்று தெரிவித்த அவர், 2017ஆம் ஆண்டு மௌலவிகள் சிலர் இது தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு முறைப்பாடு செய்திருந்தும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை, அப்போதைய புலனாய்வு மற்றும் சட்டத்துறை அதிகாரிகள் உட்பட அனைவரையும் உள்ளடக்கிப் பூரண விசாரணை நடத்தவேண்டும் என்றும் கோரியுள்ளார். (எ-இ)

## சிறைச்சாலை மோதல்களால் வெளிவரும் நிர்வாகச் சீர்கேடு

### விமல் வீரவன்ஸ தெரிவிப்பு!

கொழும்பு, ஓக.4

சிறைச்சாலை மோதல்கள் அரசாங்கத்தின் நிர்வாகச் சீர்கேட்டையே காட்டுவதாக தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பில் பேசிய அவர், அனுபவமற்றவர்களிடம் ஆட்சியை ஒப்படைத்ததால் சிறைச்சாலைகளைக்கூட நிர்வகிக்க முடியாமல் அரசு தோற்றுள்ளதாகவும், மஹர சிறைச்சாலையில் நடந்த மோதலுக்கான உண்மையான காரணத்தை அரசு இன்னும் வெளிப்படுத்தவில்லை என்றும் குற்றம் சுமத்தினார். உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலைத் தடுக்கத் தவறியதற்காக முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தரவுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள நிலையில், தாக்குதலுடன் நேரடியாகத் தொடர்புடைய தற்கொலைக் குண்டுதாரிகளின் தந்தையான இப்ராஹிமிற்கு என்ன தண்டனை வழங்கப்படப் போகிறது என அவர் கேள்வியெழுப்பினார். மேலும், பூஜித ஜெயசுந்தரவை பொலிஸ்மா அதிபராக நியமிக்க பரிந்துரைத்தவர் தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவே என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தையிட்டி கரப்பந்தாட்ட மைதான நவீனமயமாக்கல் பணி ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஓக.4

இளைஞர்களின் விளையாட்டு திறனையும், கிராமமட்ட விளையாட்டு உட்கட்டமைப்பையும் வலுப்படுத்தும் நோக்கில், யாழ்.தையிட்டி ஸ்டார் விளையாட்டுக்கழகத்தின் கரப்பந்தாட்ட மைதான நவீனமயமாக்கல் பணிகள் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டன.

விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் சுனில் குமார கமகே, ஆரம்பப் பணிகளை ஆரம்பித்துவைத்தார். 8.9 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் முன்னெடுக்கப்படும். நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ். ஸ்ரீபவானந்தராஜா, க.இளங்குமரன். யாழ். மாவட்டச் செயலர் ம.பிரதீபன் மற்றும் அரச அதிகாரிகள், விளையாட்டுக் கழக உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். (க-25)





ஒய்வுநிலை மாவட்டச் செயலர் எஸ்.மரியதாசன் குரூஸ் தான் மன்னார் அரசாங்க அதிபராக பணியாற்றியபோது 1983ஆம் ஆண்டிலிருந்து 2009ஆம் ஆண்டு வரை யுத்தக்கால தனது டைரியிலிருந்து நூலாக்கிய புத்தக வெளியீடு மன்னாரில் மிக சிறப்பாக நடைபெற்றது.

மன்னார் மறைமாவட்டத்தின் முன்னாள் குருமுதல்வர் அருட்பணி ஏ.சேவியர் குரூஸ் அடிகளாரின் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதற்பிரதியை புத்தக ஆசிரியர் ஓய்வுநிலை மாவட்டச் செயலர் எஸ்.எம்.குரூஸிடமிருந்து மன்னார் மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரன் பெற்றுக்கொண்டார். (எ-இ)

ஒடுக்கப்பட்ட சமுதாயத்தின் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் அவற்றை எவ்வாறு மேம்படுத்துதல் என்பன தொடர்பான விழிப்பூட்டும் செயலமர்வு திருகோணமலை உப்புவெளி தனியார் விடுதியொன்றில் நடைபெற்றது.

சுதந்திர ஊடக அமைப்பின் ஏற்பாட்டில் 'எனது இணையம் எனதுஉரிமை' எனும் தொனிப்பொருளில் குறித்த செயலமர்வு நடத்தப்பட்டது. (எ-இ)






வரலாற்றுச் சிறப்புமிக்க மாவிட்டபுரம் ஸ்ரீ கந்த சுவாமி ஆலயப் பராபவ வருட மஹோற்சவத்தின் கைலாசவாகனத் திருவிழா நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு பக்திபூர்வமாக இடம்பெற்றது. இதன்போது மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட அழகிய கைலாச வாகனத்தில் மாவிட்டபுரம் கந்தபெருமான் வெளி வீதி உலா வந்தார். (எ-41-66)



முல்லைத்தீவு பழையசெம்மலை, நீராவியடிப் பிள்ளையார் ஆலய 2026ஆம் ஆண்டுக்கான வருடாந்த பொங்கல்விழா நேற்றுமுன்தினம் மிகச் சிறப்பாக இடம்பெற்றது. இந்த வருடாந்தப்பொங்கல் நிகழ்வில் பெருந்திரளான அடியவர்களும் பங்கேற்றிருந்தனர். (எ-இ)






வல்வெட்டித்துறை இரத்ததானச்சங்கம் ஊடாக இரத்ததான நிகழ்வு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இதில் ஆண்கள் 38 பேரும், பெண்கள் 11 பேரும் மொத்தமாக 49 குருதிக்கொடையாளர்கள் கலந்துகொண்டு குருதிக்கொடை வழங்கினர். பருத்தித்துறை இரத்த வங்கி மருத்துவத் துறையினர் குருதிச்சேகரிப்பில் ஈடுபட்டனர். (எ-41-80)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# உயிரிழப்புகளை விரும்பவில்லை!



## டொனால்ட் ட்ரம்ப் கூறுகிறார்

நியூயோர்க், ஓக.4

**ஈரானுக்கு எதிரான உடனடித் தாக்குதல் திட்டத்தைத் தற்காலிகமாக ஒத்தி வைத்துள்ள அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப், ஹோர்மூஸ் நீரிணையை மீண்டும் திறக்கவும் அனுசக்தி விவகாரத்துக்குத் தீர்வு காணவும் ஈரானுடன் பேச்சுவார்த்தை நடைபெறவுள்ளது என்று அறிவித்துள்ளார்.**

"தாக்குதல்கள் மூலம் உயிரிழப்புகள் ஏற்படுவதை நான் விரும்பவில்லை; ஒப்பந்தம் எட்டப்படுவதையே விரும்புகிறேன்" எனக் கூறிய ட்ரம்ப், பேச்சுவார்த்தைக்கான காலக்கெடு எதையும் நிர்ணயிக்க மறுத்துவிட்டார். இந்த அறிவிப்பைத் தொடர்ந்து உலகளவில் கச்சா எண்ணெய் விலை 4 வீதத்தால் சரிவடைந்துள்ளது. பெப்ரவரி மாத இறுதியில் அமெரிக்க-இஸ்ரேலிய படைகள் தொடங்கிய போரால், உலக எண்ணெய் விநியோகத்தில் 20 வீத பங்கு வகிக்கும் ஹோர்மூஸ் நீரிணையை ஈரான் முடக்கியது. இதனால் உலகளவில் எரிபொருள் விலையேற்றமும் பணவீக்கமும் ஏற்பட்டது. இச்சூழலில், ஓமான் நாட்டின் மத்தியஸ்தத்தில் பேச்சுவார்த்தை இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது என்று ஈரானிய வெளியுறவுத்துறை தெரிவித்துள்ளது. எனினும், "ஒப்பந்தம் எட்டப்பட்டாலும் இல்லாவிட்டாலும், ஈரான் அணுசக்தித் திட்டங்களையோ ஏவுகணை உற்பத்தியையோ புதுப்பிக்க முயன்றால் இஸ்ரேல் நிச்சயமாகத் தாக்குதல் நடத்தும்" என இஸ்ரேல் ஆற்றல் துறை அமைச்சர் எலி கோஹன் எச்சரித்துள்ளார். (ஏ-இ)

## ஹோர்மூஸில் முடங்கிய கப்பல்களாலும் ஆபத்து!

லண்டன், ஓக.4

ஈரான் போரால் ஹோர்மூஸ் நீரிணையில் கடந்த சில மாதங்களாக 1,500க்கும் மேற்பட்ட வர்த்தகக் கப்பல்கள் நகரமுடியாமல் முடங்கிக் கிடக்கின்றன. இது உலகப் பொருளாதாரத்தைப் பாதிப்பதுடன், சர்வதேச கடல்சார் சூழலியலுக்குப் பெரும் ஆபத்தாக உருவெடுத்துள்ளதாக கடல் விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர். நீண்ட நாள்களாகக் கப்பல்கள் ஒரே இடத்தில் நிற்பதால், அவற்றின் அடிப்பகுதியில் பாசிகள், கிருமிகள் மற்றும் கடல்வாழ் உயிரினங்கள் பெருமளவில் படிந்து பரவுகின்றன. வர்த்தகம் மீண்டும் தொடங்கும் போது, இக்கப்பல்கள் மூலம் இந்த அந்நியப் படையெடுப்பு உயிரினங்கள் உலகெங்கிலும் உள்ள பிற கடற்பகுதிகளுக்குப் பரவி 'சூப்பர் ஸ்ப்ரெடர்' நிகழ்வை உருவாக்கும் அபாயம் உள்ளது. குறிப்பாக, தென்கிழக்கு ஆசியா மற்றும் இந்தியத் துறைமுகங்களுக்கு இதனால் அதிக ஆபத்து இருப்பதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். இந்த உயிரினங்கள் உள்நாட்டு மீன் வளத்தை அழிப்பதுடன், மின் உற்பத்தி நிலையங்களின் குளிர்விக்கும் அமைப்புகளை அடைத்து கோடிக்கணக்கில் பொருளாதார இழப்பையும் ஏற்படுத்தக்கூடும். இதைக் கட்டுப்படுத்தக் கப்பல்களைத் தூய்மைப்படுத்த வேண்டும் என விஞ்ஞானிகள் பரிந்துரைத்தாலும், தற்போதைய அவசரச் சூழலில் அது எளிதான காரியமல்ல. இதனால், காலநிலை மாற்றத்துக்கு மத்தியில் உலக நாடுகள் இதற்கான தற்காப்பு நடவடிக்கைகளை உடனடியாக எடுக்கவேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது. (ஏ-இ)



## புகலிடம் கோருவோரால் திணறுகிறது ஸ்பெய்ன்!

செவ்தா, ஓக.4

மொராக்கோ எல்லையிலுள்ள ஸ்பெயினின் வட ஆபிரிக்கப் பகுதியான 'செவ்தா' பகுதிக்குள் பல்லாயிரக்கணக்கான புகலிடக் கோரிக்கையாளர்கள் ஒரே நேரத்தில் நுழைய முயன்றதில் குறைந்தது 67 பேர் உயிரிழந்தனர். இதைத்தொடர்ந்து, எல்லைப் பகுதியில் 500 மீற்றர் நீளமுள்ள மிதக்கும் தடுப்புச்சுவரை அமைக்கும் பணியைப் பொலிஸார் தீவிரப்படுத்தியுள்ளனர். கடந்த வியாழக்கிழமை முதல் சுமார் 50,000 பேர் தரை மற்றும் கடல் வழியே செவ்தா பகுதிக்குள் நுழைந்ததாகச் ஸ்பெயின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். நிலைமையைக் கட்டுப்படுத்த தாராஜல் கடற்பகுதியில் சிறப்பு மிதவைத் தடுப்புகள் நிறுவப்பட்டு, கடற்படைப் படகுகள் மூலம் தீவிரக் கண்காணிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த அசாதாரணச் சூழல் ஐரோப்பிய ஒன்றியம் முழுவதும் பெருத்த அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. வெளிப்புற எல்லைப் பாதுகாப்பை உறுதிசெய்ய வலியுறுத்தி 22 உறுப்பு நாடுகள் கடிதம் எழுதியுள்ளன. இதனிடையே, அவசர நிலையைக் கருத்திற்கொண்டு ஐரோப்பிய ஒன்றிய உள்துறை அமைச்சர்களின் அவசரக் கூட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்புக் காரணங்களைக் கூறி ஸ்பெயினுடனான கடவுச்சீட்டு இல்லாப் பயண ஒப்பந்தத்தை இத்தாலி தற்காலிகமாகப் இடைநிறுத்தியுள்ள நிலையில், அதற்குச் ஸ்பெயின் பிரதமர் பெட்ரோ சான்செஸ் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். (ஏ-இ)

## சைபர் தாக்குதலுக்கு ஈரான் காரணமல்ல!


### ட்ரம்ப் தெரிவிப்பு

வொஷிங்டன், ஓக.4

அமெரிக்காவின் மினசோட்டா மாநிலத்தில் உள்ள குடிநீர் அமைப்புகள் மீது நடத்தப்பட்ட சைபர் தாக்குதலுக்கு ஈரான் காரணமில்லை என்றும், அந்த மாநில ஆளுநரின் நிர்வாகத் திறமையின்மையே காரணம் என்றும் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் குற்றம் சாட்டியுள்ளார்.

சமீபத்தில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் பேசிய ட்ரம்ப், "இந்தத் தாக்குதலுக்கு ஈரான் தான் காரணம் எனக் கூறுகிறார்கள். ஆனால், மினசோட்டாவின் ஊழல் நிறைந்த ஆளுநரின் அலட்சியமே இதற்குக் காரணம். ஈரானுக்கு இதைவிடப் பெரிய பிரச்சினைகள் உள்ளன" எனத் தெரிவித்துள்ளார். இருப்பினும், 30க்கும் மேற்பட்ட குடிநீர் சுத்திகரிப்பு மையங்கள் மீது நடத்தப்பட்ட இந்த ஒருங்கிணைந்த சைபர் தாக்குதலுக்கு ஈரானிய ஹேக்கர்களே காரணம் என அமெரிக்க புலனாய்வு அதிகாரிகள் சந்தேகிப்பதாக நியூயோர்க் டைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

ட்ரம்பின் இந்தக் குற்றச்சாட்டுக்குப் பதிலளித்துள்ள மினசோட்டா ஆளுநர் டிம் வால்ஸ், "இந்தத் தாக்குதலுக்கு யார் காரணம் என்பது ட்ரம்புக்குத் தெரியும். பிற மாநிலங்களும் இதனால் பாதிக்கப்பட்டுள்ளன. நவீன போரின் வடிவமான இதைக் கையாள அரசிடம் சரியான திட்டமில்லை" எனச் சாடியுள்ளார். (ஏ-இ)



## வொஷிங்டனில் காட்டுத்தீ வேகம்

வொஷிங்டன், ஓக.4

பலத்த காற்று மற்றும் கடும் வெப்பம் காரணமாக அமெரிக்காவின் கிழக்கு வொஷிங்டன் மாநிலத்தில் காட்டுத்தீ வேகமாகப் பரவிவருகிறது. ஆயிரக்கணக்கான மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டுள்ள நிலையில், 600க்கும் மேற்பட்ட வீடுகள் மற்றும் வணிகக் கட்டடங்கள் முற்றிலும் எரிந்து சாம்பலாகியுள்ளன. "நமது பிராந்தியம் சந்தித்த மிக மோசமான இயற்கை பேரழிவு இது" என ஸ்போக்கேன் மேயர் லிசா பிரவுன் வேதனை தெரிவித்துள்ளார். ஸ்போக்கேன் நகரைச் சுற்றி சுமார் 8.2 சதுர மைல் பரப்பளவிலான நிலப்பரப்பு தீக்கிரையாகியுள்ளது. 'ஆட்டம் லேன்' (Autumn Lane), 'ஓல்ட் டிரெயில்ஸ்' மற்றும் 'பேர்வியூ' ஆகிய மூன்று பிரதான தீ விபத்துகளால் அப்பகுதி முழுதும் புகைமண்டலமாகக் காட்சியளிக்கிறது. மாநிலம் முழுவதும் காற்றுத்தர எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ஒட்டுமொத்த வொஷிங்டன் மாநிலத்தில் 15 இடங்களில் காட்டுத்தீ பரவி, 2,50,000 ஏக்கருக்கும் அதிகமான நிலப்பரப்பைச் சூறையாடியுள்ளது. தீயைக் கட்டுப்படுத்த சுமார் 4,000 தீயணைப்பு வீரர்கள் தீவிரமாகப் போராடி வருகின்றனர். 'ஆட்டம் லேன்' காட்டுத்தீ மேலும் தீவிரமடைய வாய்ப்புள்ளதால், அதைக் கட்டுப்படுத்துவதற்கே முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகிறது.

இதுவரை உயிரிழப்புகள் எதுவும் பதிவாகவில்லை என்றாலும், பாதிப்புகள் குறித்து அதிகாரிகள் தொடர்ந்து ஆய்வுசெய்து வருகின்றனர். நிலைமை எப்போது வேண்டுமானாலும் மாறக்கூடும் என்பதால், பொதுமக்கள் வெளியேற்ற உத்தரவுகளைக் கண்டிப்பாகப் பின்பற்றுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (ஏ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# திசைகாட்டி அரசாங்கத்தின் பொருளாதாரம் சிறப்பானது!

## ஐ.நா. பிரதானி பாராட்டு


கொழும்பு, ஓக. 5

**தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பொருளாதாரத்தைக் கையாளும் விதம் பாராட்டத்தக்கது என ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்தின் உதவி பொதுச்செயலாளர் கன்னி விக்னராஜா தெரிவித்துள்ளார்.**

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்தின் உதவி பொதுச்செயலாளருக்கும், தொழில் அமைச்சரும் நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சருமான கலாநிதி அனில் ஜயந்த பெர்னாண்டோவுக்கும் இடையில் சந்திப்பொன்று நேற்று நடைபெற்றது. இதன்போதே, தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் பொருளாதாரத் திட்டங்களை அவர் பாராட்டியுள்ளார்.

இந்தச் சந்திப்புத் தொடர்பில் கன்னி விக்னராஜா மேலும் தெரிவித்ததாவது:-

பொருளாதார மீளெழுச்சியில் இலங்கை சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றது. நிதி ஒழுக்கம், வெளிப்படைத்தன்மை போன்ற விடயங்கள் குறித்து தற்போதைய அரசாங்கத்துடன் எவ்வித விவாதமும் இல்லை. தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் பொருளாதார டிஜிட்டல் மயமாக்கல் வேலைத்திட்டம் பாராட்டுக்குரியது - என்றார். (ம)



தென்மராட்சிப் பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தி அலகின் தேசிய வலுவூட்டல் மாதக் காலப்பகுதியில், மீசாலை கிழக்கு கிராமப் பிரிவில் 10 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்படவுள்ள வீட்டுக்கான அடிக்கல் அண்மையில் நடப்பட்டது. (க-4)

## கண்காட்சி

பளை, ஓக.4

பளை இந்திராபுரம் பேனன் முன்பள்ளிச் சிறார்களின் கண்காட்சியும் சந்தையும் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு, முன்பள்ளி மண்டபத்தில் நடைபெறும். (க-9)

## ஆடிச்செவ்வாய் வழிபாடு

யாழ்ப்பாணம், ஓக. 4

மூன்றாவது ஆடிச் செவ்வாய் உற்சவத்தை முன்னிட்டு, அம்மன் ஆலயங்களில் இன்று செவ்வாய்க்கிழமை விசேட பூசை வழிபாடுகள் இடம்பெறும். (க-25)

## மாற்றுதிறனாளிகளின் பராமரிப்புக்காக மட்டக்களப்பில் அம்மை அப்பன் இல்லம்



போரால் மாற்றுத்திறனாளிகளாக்கப்பட்ட உறவுகளின் பராமரிப்புக்காக, மட்டக்களப்பு மாவட்டத்தில் அம்மை அப்பன் பராமரிப்பு இல்லம் அமைக்கப்படவுள்ளது.

புலம்பெயர் உறவுகள் தமிழ் பரா ஸ்போர்ட்ஸ் எனும் பதிவு செய்யப்பட்ட தொண்டு நிறுவனம் இங்கிலாந்திலும், டேட்டா சரிடி எனும் அரசு சாரா நிறுவனம் இலங்கையிலும் பதிவு செய்யப்பட்டு, நன்கொடையாளர்களிடமிருந்து உதவிகளைப் பெற்று, மாற்றுத்திறனாளிகளின் மேம்பாட்டுக்காகச் செயற்பட்டு வருகின்றன. இதன் முதற்கட்டமாக, மாற்றுத்திறனாளிகளைப் பேசுபொருளாக்க வேண்டும் என்ற நோக்குடன், விளையாட்டுப் போட்டிகளை நடத்தின. தற்போது மாற்றுத்திறனாளிகள் பல்வேறு கோரிக்கைகளை அடுத்து, அவர்களுக்கென இல்லம் ஒன்றை அமைக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. அதற்கமைவாக அம்மை அப்பன் மாற்றுத்திறனாளிகள் இல்லம் மட்டக்களப்பில் அமைக்கப்பட்டு வருகின்றது. 24 அறைகள், ஒவ்வொரு அறைக்கும் தனிக்குளியலறை, மையத்தில் ஒரு மண்டபம், நாச்சியார் அமைப்பில் கட்டடம், மருத்துவ அறை, அலுவலகம் ஆகியவற்றுடன், மாடியிலிருந்து அழகிய கடற்கரையையும் மைதானத்தையும் இரசிக்கக்கூடிய வகையில் இந்தக் கட்டிடம் கட்டப்படுகின்றது. 50 மாற்றுத்திறனாளிகள் இந்த அம்மை அப்பன் இல்லத்தில் தங்க முடியும். அவர்களுக்கான உணவு, மருத்துவ வசதிகள் அனைத்தும் இலவசமாகக் கிடைக்கும் வகையில், இந்த இல்லம் நடத்தப்படும். எதிர்வரும் 2028ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் மாற்றுத்திறனாளிகளை உள்வாங்கும் இலக்கோடு இந்த இல்லம் செயல்படும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (க)



உடுப்பிட்டி தெற்குப் பண்டகைப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் நேற்றுத் திங்கட் கிழமை முற்பகல் 10.30 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. தொடர்ந்தும் பத்துத் தினங்கள் காலை, மாலை திருவிழாக்களாக மஹோற்சவம் நடைபெறும். (எ-66)

## தவறான முடிவெடுத்து மூவர் உயிர்மாய்ப்பு

சாவகச்சேரி, ஓக.4

தென்மராட்சிப் பிரதேசத்தில் தவறான முடிவெடுத்து, உயிரை மாய்த்துக் கொண்ட மூவரின் சடலங்கள், பொலிஸாரால் சாவகச்சேரி மருத்துவமனை சவச்சாலையில் நேற்றுத் திங்கட்கிழமை ஒப்படைக்கப்பட்டுள்ளன. நாவற்குழி, நுணாவில், கொடிகாமம் பகுதிகளைச் சேர்ந்தவர்களின் சடலங்களே இவ்வாறு ஒப்படைக்கப்பட்டுள்ளன. இவர்களின் இறப்புத் தொடர்பாக சாவகச்சேரி மற்றும் கொடிகாமம் பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்துள்ளனர். (க-9-28)



வலிகாமத்தின் பல பகுதிகளிலும் தற்போது சிறுபோக வெங்காய அறுவடை இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது. (ம-66)


## சர்வதேச ஒலிம்பியாட் போட்டிக்கு வடமாகாணத்தைச் சேர்ந்த இரு மாணவர்கள் தெரிவு!

யாழ்ப்பாணம், ஒக். 4

இந்தோனேசியாவில் நடைபெறவுள்ள சர்வதேச ஒலிம்பியாட் போட்டிக்கு வடமாகாணத்தில் இருந்து இரண்டு மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 2ஆம் திகதி முதல் ஒக்டோபர் 6ஆம் திகதி வரை இந்தோனேசியாவில் நடைபெறவுள்ள சர்வதேச விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டிக்கு 12 மாணவர்கள் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி கலந்து கொள்ளக் கல்வி அமைச்சால் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த நான்கு மாணவர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதற்கமைய, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவரான பி.ஸ்ரீகரிஷன், கிளிநொச்சி மத்திய கல்லூரி மாணவரான அமிலோஜெனியுஷ், அக்கரைப்பற்று முனவ்வரா கனிஷ்ட கல்லூரி மாணவியான எம்.எச்.அனாவ, மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி மாணவரான எம்.ஹவிஸ்ஜனன் ஆகியோர் குறித்த போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ம-66)



டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு, சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மாணவர்களால் நேற்றுத் திங்கட்கிழமை கல்லூரி மைதானத்தில் தெருக்கூத்து நடத்தப்பட்டது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



கொங்கோவில்

# எபோலா தாண்டவம்; 1,556 பேர் உயிரிழப்பு!

கொங்கோ, ஓக.4

கொங்கோவில் எபோலா வைரஸ் பாதிப்பால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 1,556 ஆக அதிகரித்துள்ளது. மத்திய கிழக்கு ஆபிரிக்காவில் அமைந்துள்ள கொங்கோ நாட்டில் எபோலா வைரஸ் நோய் வேகமாகப் பரவிவருகிறது. கொங்கோவில் 3,532 பேருக்கு எபோலா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது. மேலும், எபோலா வைரஸ் பாதிப்பால் 1,556 பேர் உயிரிழந்துள்ளனர். கொங்கோவில் எபோலா வைரஸ் வேகமாகப் பரவிவரும் நிலையில் வைரஸைக் கட்டுப்படுத்த முடியாமல் அந்நாட்டுச் சுகாதாரத்துறை திணறிவருகிறது. (ச-இ)

# வெங்காயச் செய்கைக்கு சொட்டு நீர்ப்பாசனம்

யாழ்ப்பாணம், ஓக.4

குடாநாட்டியில் கடும் வறட்சி ஏற்பட்டுள்ள நிலையில், விவசாயிகள் சொட்டு நீர்ப்பாசனம் மூலம், தோட்டங்களுக்கு நீர்பாய்ச்சி வருகின்றனர். தற்போது வெங்காயச் செய்கையில் ஈடுபட்டுள்ள அதிகளவான விவசாயிகள், தொடர் வறட்சியால் கடும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர்.

செய்கை பண்ணப்பட்ட வெங்காயம் முளைக்கும் தருவாயில் உள்ள நிலையில், அவற்றை அழிவடையாமல் பாதுகாக்க, தோட்டங்களுக்குச் சொட்டு நீர்ப்பாசனம் மூலம் நீர்பாய்ச்சி வருகின்றனர். (க-25)

# நல்லை ஆதினத்தில் தினமும் அருளுரை

யாழ்ப்பாணம், ஓக.4

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் பெருந்திருவிழாக் காலத்தில், தருமை ஆதீனத் தம்பிரான் ஸ்ரீமத் மாணிக்கவாசகத் தம்பிரான் சுவாமிகள், நல்லை ஆதீனத்தில் தினமும் அருளுரையாற்றுவார். (க-25)




வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில், இணுவைத் தமிழ்ச்சங்கத்தால் விழிப்புணர்வு வீதி நாடகம் ஸ்கந்தா ஆரம்பப்பிரிவு, ஏழாலை ஸ்ரீ முருகன் மகா வித்தியாலயம், ஏழாலை மகா வித்தியாலயம் ஆகியவற்றில் நேற்றுத் திங்கட்கிழமை இடம்பெற்றது. (க)


## மணமகள் தேவை

1. சாவகச்சேரி. இந்து. கௌரவகுலம் (V) 1979, உத்திராடம். BSc Engineering UK Citizen மணமகனுக்கு மணமகள் தேவை - 25888
2. நயினாதீவு - சாவகச்சேரி. இந்து. கௌரவகுலம் (V). 1994. புனர்பூசம். BSC Software Development, Canada Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. - (58357)
3. உடுப்பிட்டி - நீர்வேலி. இந்து விஸ்வகுலம், 1991. பரணி. A/L, Germany citizen மணமகனுக்கு மணமகள் தேவை - 58017
4. வேலணை. கௌரவகுலம். (V). இந்து. 1987, ஆயிலியம். IT Degree, Software Engineer, Vegetarian, Divorce, UK Citizen மணமகனுக்கு மணமகள் தேவை - 58553
5. உரும்பிராய். இந்து. கௌரவகுலம். (V) 1996, சித்திரை. BBA, Manager, UK Citizen, மணமகனுக்கு மணமகள் தேவை - 58952
6. காரைநகர். இந்து. கௌரவகுலம் (V) 1985, பூசம். BSc, Business, UK Citizen மணமகனுக்கு மணமகள் தேவை - 58902
7. சாவகச்சேரி. இந்து. கௌரவகுலம் (V). 1995. அத்தம். A/L, Newzealand citizen, மணமகனுக்கு மணமகள் தேவை - 58833
8. Brown Road - அத்தியடி இந்து. கௌரவகுலம். (V). 1988. அஸ்வினி. CIMA, CPA, Finance Manager, Australia Citizen, Divorce மணமகனுக்கு மணமகள் தேவை - 58669
9. கோண்டாவில். இந்து. கௌரவகுலம் (V). 1993. உத்தரம். BSC in Civil Engineering, UK Citizen மணமகனுக்கு மணமகள் தேவை.
10. மாதகல். Romancatholic. குருகுலம். 1982, KFC Team Leader, UK Citizen. மணமகனுக்கு மணமகள் தேவை - 58541

எம்மிடம் எல்லா ஜாதியிலும் உள்நாட்டு. வெளிநாட்டு மணமகன்களும். மணமகள்களும் உண்டு.

S.Sharma J.P. Call :- 077 539 3728
www.thaalee.com Whatsapp:- 077 992 1494

# ஆடிக் கார்த்திகையன்று நல்லூர் வளைவு திறப்பு

யாழ்ப்பாணம், ஓக.4

நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் வடக்குத் திசையில், கோவில் வீதியில் அமைக்கப்பட்டுள்ள அலங்காரத் தோரண வாசலான 'நல்லூரான் வடக்கு வாசல் வளைவு', ஆடிக் கார்த்திகை நன்னாளான நாளைமறுதினம் வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்குத் திறக்கப்படும். அன்றைய தினம் முற்பகல் 10.30 மணிக்கு சட்டநாதர் சிவன் கோவிலிருந்து சமய அனுஷ்டானங்களுடன், நெல் மணிகள் நிரம்பிய பெட்டகத்தை ஏற்றிய இரட்டை திருக்கை காளை மாட்டு வண்டில், மங்கள வாத்தியங்கள் முழங்க வளைவை நோக்கிப் புறப்படும். தொடர்ந்து, தெய்வேந்திர முகூர்த்தமாகிய நண்பகல் 12 மணிக்கு, நெல் மணிகள் நிரம்பிய பெட்டகத்துடன் வரும் காளை மாட்டு வண்டில் முதன்முறையாக புதிய வளைவின் ஊடாகச் செல்லும். யாழ்ப்பாணத்தின் கந்தபுராண மரபையும், கலாசாரப் பாரம்பரியத்தையும் எடுத்தியம்பும் வகையில் இவ்வளைவு வடிவமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-25)


## INVITATION FOR BID 2026/11
## VALIKAMAM EAST PRADESHIYA SABHA
## NORTHERN PROVINCE


1. The Chairman, Divisional Procurement Committee, on behalf of the Valikamam East Pradeshiya Sabha,Puttur invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below. All the projects will be funded via Stamp Duty
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB), To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of Building construction for grade mentioned in the table below.

   "Bidders Shall also register themselves with the Register of Public Contracts Sri Lanka, in terms of the Public Contract Act No 03 of 1987.
3. Qualification' requirements are indicated in section 4 of the Procurement document. Additional details are provided in the Bidding data & Contract data (Section 5) for SBD 1 Documents.
4. Interested bidders may obtain further information from address given below in 6 and inspect the Procurement documents at the same place on any working days from 2026-08-04 To 2026-08-18 during 09:00 hrs and 15:00 hrs
5. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Chairman, Valikamam East Pradeshiya Sabha, Puttur (T.P:021-205-8865, e.mail: pmdveps @ gmail.Com) from 9:00 hrs to 15:00 hrs. during the period stated in table below upon payment of non-refundable fees as mentioned in the table below. The method of payment will be by cash.
6. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the Chairman, Divisional Procurement Committee, Valikamam East Pradeshiya Sabha, Puttur on or before as stated in table below. Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
7. Pre-Bid Conference will be held at Conference Hall, Valikamam East Pradeshiya Sabha, Puttur as stated in table below.
8. Bids shall be accompanied by a Bid security/ Refundable cash Deposit/ Bank Draft as per the information given inthe Tables.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | Document Issuing/Purchasing Period | | | From 2026-08- 04 To 2026-08-18 | | | | |
| | Pre-Bid Conference | | | At 10.30 A.M on 2026-08-11 | | | | |
| | Closing and Opening of Bids | | | At 2.00 P.M on 2026-08-19 | | | | |
| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Grade Required | Non-Refundable Fee (Rs.) | Required Bid Security/ Bank Draft/ Security Deposit | | Bid Validity Period (Days) |
| | | | | | | Security Amoun (Rs.) | Validity Period | |
| SD/NP/ JAF/VEPS /2026/01 | Renovation of a Portion of the Top of the Head Office Building into a Public Conference Hall | 10.69 | 91 | C7, C6 & C5 (Building) | 5,000.00 | 107,000.00 | 02.12.2026 | 77 |

Chairman
Divisional Procurement Committee,
Valikamam East Pradeshiya Sabha, Puttur. 04/08/2026


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கொட்டித்...

முடங்கியுள்ளது. வெள்ளப் பேரிடரால் நுவரெலியா மாவட்டத்தில் (நேற்று மாலை 4 மணிவரையான நிலவரத் தின்படி) 581 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 331 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 6 பேர் காணாமல் போயுள்ளனர். அத்துடன், ஹட்டன், கொட்டகலை மற்றும் தலவாக்கலை போன்ற பிரதேசங்களிலும் பல கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. பரவலாக நிலச் சரிவுகள் ஏற்பட்டுள்ளன.

சீரற்ற காலநிலை காரணமாக பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கல்வி நடவடிக்கைகள் அனைத்தும் தற்காலிகமாக ரத்துச் செய்யப்பட்டுள்ளன. அத்துடன், நுவரெலியாவில் உள்ள பாடசாலைகளுக்கு இன்று விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. வீதிகள்தோறும் மண்சரிவு ஏற்பட்டுள்ளதால், மிகவும் அவதானமாகப் பயணிக்குமாறு சாரதிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. (அ-ம)

## தேக்கமான...

வழங்கியுள்ளார். ஜனாதிபதிக்கும் தமிழ்க் கட்சிகளுக்கும் இடையிலான சந்திப்பில், புதிய அரசியலமைப்புத் தொடர்பில் தமிழ்க் கட்சிகள் கேள்வி எழுப்பின.

இதன்போது ஜனாதிபதி அநுர மேலும் தெரிவித்தாவது:-

புதிய அரசியலமைப்பு உருவாக்கல் பணிகள் நினைத்த வேகத்தில் இடம்பெறவில்லை. அந்தப் பணிகள் தாமதமாகியுள்ளன. மிக விரைவில் பணிகள் முன்னெடுக்கப்படும். அத்துடன், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை முடிவுக்குக் கொண்டுவருவதிலும் அரசாங்கம் உறுதியுடன் உள்ளது - என்றார்.

மாகாணசபைத் தேர்தலை ஒத்திவைக்கும் எண்ணம் அரசாங்கத்துக்கு இல்லை. அந்தத் தேர்தல் விரைவில் நடத்தப்படும் என்றும் ஜனாதிபதி அநுர வாக்குறுதி வழங்கினார்.

இதன்போது குறுக்கிட்ட தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள், பழைய முறையில் தேர்தலை நடாத்துமாறும், அதன் பின்னர் அடுத்த பதவிக்காலம் வரையுள்ள இடைவெளியில் தேர்தல் முறைமை மாற்றம் தொடர்பில் தீர்மானமொன்றுக்கு வரமுடியும் என்றும் எடுத்துரைத்தனர். அதற்குப் பதிலளித்த ஜனாதிபதி, இந்த விவகாரம் தொடர்பில் ஆராய்வதற்கு நியமிக்கப்பட்டுள்ள தெரிவுக்குழுவின் அறிக்கையை அடிப்படையாகக்கொண்டு அடுத்தகட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றார்.

இதன்போது குறுக்கிட்ட சாணக்கியன் மற்றும் நிஸாம் காரியப்பர், அந்தத் தெரிவுக்குழுவில் தாம் அங்கம் வகிப்பதாகவும், காலத்தை இழுத்தடிக்கும் நோக்கிலேயே தெரிவுக்குழு நியமிக்கப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டு, அதற்கான காரணங்கள் பற்றி விளக்கமளித்தனர். இவற்றை செவிமடுத்த பின்னர் பதிலுரைத்த ஜனாதிபதி, இதனை இழுத்தடிப்பின்றி விரைவாக முடிவுறுத்துவதற்கான வழிவகைகள் குறித்து தான் தெரிவுக்குழுவின் தலைவருடன் உரையாடுவதாகக் கூறினார். (அ-ம)

## மகாநாயக்கர்...

பயணம்செய்து மகாநாயக்க தேரர்களைச் சந்தித்துக் கலந்துரையாடல் நடத்தியுள்ளனர்.

அரசியற் பழிவாங்கல்களுக்காக நீதிபதிகளின் ஓய்வுவயது நீடிக்கப்படவில்லை. மாறாக வழக்குகளைத் துரிதப்படுத்தும் நோக்கத்துக்காகவே இந்தத் திட்டம் அமுலுக்கு வருகின்றது என்று இதன்போது அமைச்சர்கள் விளக்கமளித்துள்ளனர். (அ-ம)

## நீதிபதிகளின்...

தனிநபர்களை இலக்குவைத்து மேற்கொள்ளப்படும் அரசியலமைப்புத் திருத்தம் ஏற்றுக் கொள்ளக்கூடியது அல்ல. இதுகுறித்து எம்மிடம் எந்தவித கலந்துரையாடலும் நடத்தப்படவில்லை. நாம் கலந்துரையாடலுக்கு நேரம் கோரியபோதும் உரிய காலப்பகுதிக்குள் அது வழங்கப்படவில்லை. இந்த முன்மொழிவு பொருத்தமானது அல்ல என மகாநாயக்க தேரர்களும் ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டியுள்ளனர். கத்தோலிக்கத் திருச்சபையும் இதற்குத் தனது எதிர்ப்பைப் பதிவு செய்துள்ளது. ஏனைய மதத் தலைவர்களும் இதுகுறித்த தமது நிலைப்பாட்டை விரைவில் தெளிவுபடுத்துவார்கள் என நம்புகிறோம். எனவே, நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயதெல்லையை நீடிக்கும் திட்டத்தை அரசாங்கம் உடனடியாகக் கைவிட வேண்டும்;. இதனை அடுத்த கட்டத்துக்கு எடுத்துச்செல்லக் கூடாது. நீதித்துறையின் சுயாதீனத்தன்மை பாதுகாக்கப்பட்டால் மட்டுமே வெளிநாட்டு முதலீடுகள் நாட்டிற்கு வரும். பிரான்ஸிலுள்ள சட்டத்தரணிகள் சங்கமொன்றும் இந்த முன்மொழிவுக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளது - என்றார். (அ-ம)

## செம்மணிப்...

செம்மணி மனிதப் புதைகுழியில் மூன்றாம்கட்ட அகழ்வுப் பணிகளின் அடுத்தகட்ட நடவடிக்கைகள் இன்று இடம்பெறவுள்ளன.

செம்மணிப் புதைகுழியில் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகள் இடம்பெற்று வந்த நிலையில், அகழ்வுப் பணியில் ஈடுபடுவோருக்கு ஓய்வு வழங்கும் வகையில் கடந்த சில நாள்களாக பணிகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன. இவ்வாறான நிலையிலேயே இன்றையதினம் அகழ்வுப் பணிகள் மீள ஆரம்பமாகவுள்ளன.

செம்மணி புதைகுழியில் இதுவரை முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்டம் என 91நாள்கள் அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில் 446 என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றில் 434 என்புத் தொகுதிகள் மீட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## எரியுண்ட....

இரணைமடுக் குளத்தைப் பார்வையிடச் சென்றவர்கள் எரிவடைந்த நிலையில் சடலமொன்று இருப்பதை அவதானித்து, அது தொடர்பில் பொலிஸாரிடம் முறைப்பாடு வழங்கியுள்ளனர். இந்த முறைப்பாட்டுக்கு அமைய இடம்பெற்ற மேலதிக நடவடிக்கைகளின் அடிப்படையிலேயே குறித்த சடலம் மீட்கப்பட்டுள்ளது. சடலமாக மீட்கப்பட்டவர் யாரென நேற்று இரவுவரை உறுதிப்படுத்தப்படவில்லை. சம்பவ இடத்தில் தடயவியல் பொலிஸார் சான்றுகளைச் சேகரித்துள்ள நிலையில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (அ-ம-316-19-26)

## குடும்பப்...

நேற்று விபத்துக்கு உள்ளானதில் குடும்பப் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

இயக்கச்சி முகாவில் பகுதியைச் சேர்ந்த சந்திரன் சசிகலா (வயது-49) என்ற குடும்பப் பெண்ணே இவ்வாறு உயிரிழந்தவராவார். விபத்தில் படுகாயம் அடைந்த பெண் உடனடியாக மீட்கப்பட்டு கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில், மேலதிக சிகிச்சையின்போது உயிரிழந்துள்ளார். மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ-ம-80-110)

## கோத்தாபயவின்...

துள்ளது. உயிர்த்தஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தான் கைதாவதைத் தடுத்து நிறுத்துமாறு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் கோத்தாபய ராஜபக்ச அண்மையில் ரிட்மனு தாக்கல் செய்திருந்தார். பொலிஸ் மா அதிபர் பிரியந்தவீரசூரிய, குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் ஷானி அபேசேகர உள்ளிட்டவர்கள் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்ட அந்த மனுமீது நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது. இதன்போதே, குறித்த மனுவை செப்ரெம்பர் மாதம் 22ஆம் திகதிவரை நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது. (அ-ம)

## காணி...

தமிழர்களின் பொதுப் பிரச்சினைக்காக இணைந்து செயற்பட்டுவரும் ஆறு தமிழ்க் கட்சிகளுக்கும், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் இடையிலான சந்திப்பு ஜனாதிபதி செயலகத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போதே காணி விடுவிப்புத் தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாட்டை ஜனாதிபதி அநுரகுமார மீண்டும் பதிவு செய்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

காணிகளை விடுவிக்கும் விடயத்தில் நாங்கள் ஏற்கனவே கொள்கைப் பிரகடனத்தை வெளியிட்டுள்ளோம். வடக்கு - கிழக்கில் படையினரின் வசமுள்ள காணிகளை விடுவிக்க வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு. அந்த நிலைப்பாட்டுக்கு அமையவே எமது அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது. எனினும், இதுவரை விடுவிக்கப்படாத காணிகள் தொடர்பில் நாங்கள் கூடுதலான கரிசனை கொண்டுள்ளோம். அந்தக் காணிகளை ஏன் விடுவிக்க முடியாது? என இராணுவத்திடம் அறிக்கை கோரியுள்ளேன். அந்த அறிக்கையின் அடிப்படையில் அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.

இந்தக் கலந்துரையாடலில் தமிழரசுக் கட்சி சார்பில் எம்.ஏ.சுமந்திரன் மற்றும் இரா.சாணக்கியன், ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டணி சார்பில் சுரேஷ்பிரேமசந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், முருகேசு சந்திரகுமார், இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம், நிஸாம் காரியப்பர், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பில் அமீர் அலி, நாடாளுமன்ற உறுப்பினர் மொஹமட் தாஹிர், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான், தமிழ் முற்போக்குக் கூட்டணி சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் வே.இராதாகிருஷ்ணன் ஆகியோர் கலந்துகொண்டனர். (அ-ம)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சுகாதார பணி உதவியாளர் நியமனத்துக்கு நேர்முகம்

யாழ்ப்பாணம், ஓக.4

**வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் கீழுள்ள மருத்துவமனைகளில் காலியாகவுள்ள சுகாதாரப் பணி உதவியாளர் (தரம் III) பதவிக்கான 300 வெற்றிடங்களை நிரப்புவதற்கான கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வுகள் நேற்று யாழ்ப்பாணம் பண்ணை சுகாதாரக் கிராமத்தில் ஆரம்பமாகின.**

எதிர்வரும் 21ஆம் திகதி வரை தொடர்ச்சியாக நடைபெறவுள்ள இந்தத்தேர்வுக்காக 6 விசேட குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதுடன், தினமும் 3 நேரப் பிரிவுகளாக மதிப்பீடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. ஆரம்ப நாளான நேற்று விண்ணப்பதாரர்கள் மிகுந்த ஆர்வத்துடன் பங்கேற்றனர்.

அழைப்புக் கடிதம் கிடைக்கப் பெறாத விண்ணப்பதாரர்கள் நாளை புதன்கிழமைக்கு பிறகு 0212220807 என்ற தொலைபேசி இலக்கத்தைத் தொடர்புகொண்டு, தமது தேசிய அடையாள அட்டை இலக்கத்தைச் சமர்ப்பித்து விவரங்களைப் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-66)

# மண்மேடு வீழ்ந்து நால்வர் உயிரிழப்பு

கொழும்பு, ஓக. 4

ஹற்றன் கினிகத்ஹேனை பொல்பிட்டிய பகுதியில் வீடொன்றின் மீது மண்மேடு சரிந்து விழுந்ததில் நால்வர் உயிரிழந்துள்ளனர்.

தொடர்ச்சியான மழை வீழ்ச்சியைத் தொடர்ந்தே இந்தச் சோகமான சம்பவம் இடம்பெற்றுள்ளது. பொல்பிட்டிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம)

# பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஓக.4

மட்டுவில் சந்திரபுரம் விவசாய சம்மேளனத்தின் பொதுக்கூட்டம் மட்டுவில் சந்திரபுரம் பொது நோக்கு மண்டபத்தில் இன்று பி.ப. 2 மணிக்கு விவசாய சம்மேளனத்தின் தலைவர் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத்தில் கைதடி கமநல சேவை நிலையத்தின் பெரும்போக உத்தியோகத்தர் உட்பட பலர் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-131)

# ஹரக் கட்டாவின் மனு ஒத்திவைப்பு

கொழும்பு, ஓக.4

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திலிருந்து தப்பிச் செல்லச் சதித்திட்டம் தீட்டியதாகக் குற்றம் சாட்டப்பட்ட 'ஹரக் கட்டா' உள்ளிட்ட 5 பிரதிவாதிகளுக்கு எதிராகப் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் தொடரப்பட்ட குற்றச்சாட்டுகளை நீக்கி அண்மையில் வழங்கப்பட்ட தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்யவுள்ளதாகச் சட்டமா அதிபர் நீதிமன்றில் அறிவித்துள்ளார். கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி புத்திக சி. ராகல முன்னிலையில் நேற்று இந்த வழக்கு விசாரணைக்கு வந்த போதே அரச சட்டவாதி இதனைத் தெரிவித்தார். இதைத் தொடர்ந்து, சந்தேகநபர்களின் பிணைக் கோரிக்கை மீதான உத்தரவு எதிர்வரும் 20ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. இதனிடையே, பயங்கரவாதத் தடைச்சட்டக் குற்றச்சாட்டுகள் நீக்கப்பட்டுள்ளதால், தங்காலை பழைய சிறைச்சாலையிலுள்ள 'ஹரக் கட்டா'வை வேறு பொருத்தமான, பலத்த பாதுகாப்புடைய சிறைச்சாலையொன்றில் தடுத்துவைக்குமாறும் நீதிபதி உத்தரவிட்டார். (எ-இ)



# தேசிய வலைப்பந்தாட்டத்தில் யாழ்.பல்கலை அணி சம்பியன்


யாழ்ப்பாணம்.ஓக.4

இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான தேசியமட்ட வலைப்பந்தாட்டப் போட்டியில், யாழ். பல்கலைக்கழக அணிசம்பியன்கிண்ணத்தைச்சுவீகரித்தது. யாழ். பல்கலைக்கழக உள்ளக விளையாட்டரங்கில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இறுதியாட்டத்தில், யாழ். பல்கலைக்கழக அணியை எதிர்த்து, சப்ரகமுவ பல்கலைக்கழக அணி மோதியது. ஆட்ட இறுதியில் யாழ்.பல்கலைக்கழக அணி 60:55 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுச் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்து. (சு-422)

# மட்டக்களப்பில் நேற்றுக் கனமழை

மட்டக்களப்பு, ஓக.4

மட்டக்களப்பு மாவட்டத்தில் நீண்ட இடைவெளிக்குப் பிறகு பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்துள்ளது. தென்கிழக்குக் கடற்பகுதியில் ஏற்பட்டுள்ள காலநிலை தளம்பல் நிலை காரணமாக, திங்கட்கிழமை காலை வரையிலான 24 மணிநேரத்தில் 47.8 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாக வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது. இடரார்ந்த இந்த வானிலை மாற்றத்தால் கடற்றொழிலாளர்களின் இயல்பு வாழ்க்கை கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. வானிலை எச்சரிக்கையை அடுத்து மீனவர்கள் கடலுக்குச் செல்லாததால் அவர்களின்அன்றாடவாழ்வாதாரம்முடங்கியுள்ளது. கரையோரப் பகுதி மீனவர்கள் தமது மீன்பிடிப் படகுகளைப் பாதுகாப்பான இடங்களுக்கு நகர்த்திவைத்துள்ளதுடன், கடலின் நிலைவரத்தைத் தீவிரமாகக் கண்காணித்து வருகின்றனர். திங்கட்கிழமை காலையிலிருந்தே மாவட்டம் முழுவதும் மேகமூட்டமான சூழல் நிலவிவருகிறது. (எ-இ)





தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் வீதிப் புனரமைப்புத் திட்டத்தின் கீழ், நீர்வேலி வாய்க்கால்தரவை விநாயகர் ஆலயத்துக்கு அருகாகவுள்ள மோதரகேணி வீதி புனரமைக்கப்படவுள்ளது. இதற்கான ஆரம்பப் பணிகள் அண்மையில் இடம்பெற்றன. (ம-25)

**வேலையாள் தேவை**

A9 வீதி, புத்தூர் சந்தியில் இயங்கிவரும் N.S.Nimal Welding (மின் ஒட்டு) நிறுவனத்திற்கு வேலை தெரிந்த வேலையாட்கள் தேவை.

Nimal : +44 743 889 2173
Thipan : +94 773 456 552

(CS/62016) J-1

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் ... 04.08.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.